# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 4 ஜனவரி – மார்ச் 1998 இதழ் 1



*சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் (1834-1892)*

# திருமறைத்தீபம்

ISBN 1173-7255

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. எழுதிக் கேட்கும் எவருக்கும் பத்திரிகை சந்தா எதுவுமின்றி இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ஏனையோருக்கு பத்திரிகையை அறிமுகப் படுத்தி வைப்பதன் மூலம் வாசகர்களும் இவ்வூழியத்தில் பங்கு கொள்ளலாம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Tel & Fax:** 64 9 527 1522
**email:** bala@ihug.co.nz

கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கள் என்றுதான் கூற வேண்டும்.

- *சி. எச். ஸ்பர்ஜன் (1834-1892)*

## திருமறைத்தீபம் குழந்தைப்பருவத்தைக் கடந்து நான்காவது வருடத்தில் காலடி எடுத்து வைத்திருக்கிறாள். எப்படி வளர்வாளோ, இவளை வளரத்தெடுக்க நம்மால் முடியுமோ என்றெல்லாம் ஐயம் கொண்டிருந்த எம்மை வியப்பில் ஆழ்த்தி நன்றாக வளர்ந்து வருகிறாள் தீபம்.


அவளுக்கு வண்ணச்சட்டை போட்டால் என்ன என்று கேட்டு பல வாசகர்கள் எழுதியிருந்தார்கள். அவர்களது உள்ளம் குளிர இவ்வருட முதல் பத்திரிகையின் அட்டையை வண்ணத்தில் வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

ஆசிரியரின் வெளிநாட்டுப் பிரயாணங்களின் காரணமாக பத்திரிகையில் தொடராக வந்து கொண்டிருக்கும் சில ஆக்கங்களை இவ்விதழில் வெளியிட முடியவில்லை. வரப் போகும் இதழ்களில் அவை தொடர்ந்து வெளிவரும்.

சத்தியத்தில் ஆர்வம் கொண்டு, வேதமே கர்த்தரின் இறுதி வாக்கு என்று நம்பி வளர்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவ அன்பர்களுக்காக வெளிவரும் இப்பத்திரிகையின் இலட்சியத்தைப் பற்றி அடிக்கடி இப்பகுதியில் விளக்கியுள்ளோம். கிருபையின் போதனைகளைப் பலரும் அறியத்தந்து, சீர்திருத்தவாதிகளின் பாதையில் திருச்சபைகள் தோன்றவும் வளரவும் எம்மால் முடிந்ததைக் கர்த்தரின் வழிநடத்தலின்படி செய்ய ஆர்வமுடன் உழைத்து வருகிறோம். இப்பெரும் இலட்சியத்தை அடைய நமக்குப் பேருதவிபுரியும் ஓரே ஆயுதம் வேதம் மட்டுமே என்பது எமது உறுதியான நம்பிக்கை. அந்நம்பிக்கை நம்மெல்லோர் மத்தியிலும் வேரூன்றி வளர ஜெபிக்க வேண்டியது நமது கடமையாகின்றது. வேதத்தைத் தூக்கியெறிந்துவிட்டு கர்த்தரின் பெயரில் காரியமாற்ற முயலும் கடல் போன்ற கூட்டத்தின் பேரலைகளுக்கு மத்தியில் அயராது துடுப்புப் போட வேண்டியது நமது கடமை. கரையை அடையும்வரை ஓயாத பெரும் அலைகளின் இரைச்சலும், உடைப்பேன் உன்னை என்று உரமோடு தாக்கும் அலைகளும் ஒருநாளும் ஓயப் போவதில்லை. அதுவரை நெஞ்சுரத்தோடும், நேர்மையோடும் கர்த்தரின் பணியில் தொடர்ந்து ஈடுபடுவதை நமது இலட்சியமாகக் கொள்வோம்.

**போல் யொங்கி சோ உலகிலேயே மிகப் பெரிய சபையான கொரியாவின் யொய்டோ பூரண சுவிஷேச சபையின் போதகர். டாக்டர் பீட்டர் மாஸ்டர்ஸ், யொங்கி சோவின் இறையியற் கோட்பாடுகள் வரலாற்று பூர்வமான கிறிஸ்தவத்தைவிட்டு விலகி நிற்பதாகக் கூறுகிறார். யொங்கி சோவின் போதனைகள் புத்த மதத்தையும், யோகப் போதனைகளையும் தழுவியவை. அந்நிய மதங்களைத் தழுவிய ஆபத்தான போதனைகளை யொங்கி சோ தொடர்ந்து போதித்து வருகிறார். இது அவரது போதனைகளை விளக்கும் இறுதிக் கட்டுரை.**

# போல் யொங்கி சோவின் நான்காவது பரிமாணம்





போல் யொங்கி சோவின் நான்காவது பரிமாணப் போதனைகளைத் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம். கடந்த இதழில் நான்காவது பரிமாணத்திற்குள் எவ்வாறு உள்ளிடுவது என்று யொங்கி சோ விளக்கும் அபத்தத்தைப் பார்த்தோம். வேதத்தில் காண முடியாத போதனைகளுக்கு வேத விளக்கம் கொடுத்து ஒன்றுமறியாத அநேக அப்பாவிகளைத் தொடர்ந்து அவர் ஏமாற்றி வரும் செயலையும் பார்த்தோம். இவ்விதழில் தொடர்ந்து அவரது முக்கியமான போதனைகளைப் பார்ப்போம்.

### பேசப்படும் வார்த்தைகளின் வல்லமை

நாம் பேசும் வார்த்தைகளுக்கு அதிக வல்லமை இருப்பதாகக் கூறும் யொங்கி சோ, அதனைப் பயன்படுத்தி நாம் அநேக காரியங்களை சாதிக்க முடியும் என்று கூறுகிறார். இதைப்பற்றி மேலும் விளக்கும் யொங்கி சோ, கர்த்தர், நாம் வீணாக எதையும் அவரைக் கேட்டு நேரத்தை வீணடிப்பதைவிட பேச்சின் வல்லமையால் காரியங்கள் சாதிப்பதையே விரும்புகிறார் என்று கூறுகிறார். பேச்சின் வல்லமையால் எவ்வாறு அநேக காரியங்களைச் சாதிப்பது என்ற உண்மையைக் கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தியதாகவும், அதனைப் பயன்படுத்தியே தன் வாழ்க்கையில் அநேக காரியங்களை சாதிக்க முடிந்ததாகவும், பலர் மத்தியில் அனேக அற்புதங்களைச் செய்யவும் இதுவே துணையாக இருந்ததென்றும் விளக்குகின்றார்.

### லோகொஸ் (Logos), ரேமா (Rema) தத்துவம்

இத்தத்துவத்தை விளக்கும் யொங்கி சோ, வேதத்தில் இருவிதமான வார்த்தைகள் இருப்பதாகக் கூறுகிறார். அவை, லோகொஸ், ரேமா எனும் வார்த்தைகள். லோகொஸ், கர்த்தரின் பொதுவான பேச்சைக் குறிக்க வேதத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள கிரேக்க வார்த்தை என்று யோங்கி சோ





விளக்குகிறார். அதாவது, வேதத்தில் உள்ள அனைத்து வார்த்தைகளையும் லோகொஸ் என்று கூறலாம். அது கர்த்தரால் பேசப்பட்ட வார்த்தை. லோகொஸ் எல்லோருக்கும் பொதுவானது. அனைவராலும் வாசிக்க முடிந்த, கேட்க முடிந்த வார்த்தை. ஆனால் வேதத்தில் இன்னுமொரு கிரேக்க வார்த்தையையும் பார்க்கிறோம். அது ரேமா எனும் வார்த்தை. இவ்வார்த்தை வித்தியாசமானது. இது கர்த்தரால் பேசப்படும் வார்த்தை. ஒரு குறிப்பிட்ட மனிதனுக்காக, குறிப்பிட்ட சூழ்நிலையில் கொடுக்கப்படுகிற வார்த்தை. உதாரணமாக, ரோமர் 10:17; மத்தேயு 14:22, 31 ஆகிய வேதபகுதி களில் வார்த்தை என்ற பதத்திற்கு ரேமா என்ற கிரேக்க வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்விரு வேதப்பகுதிகளிலும் ரேமா தேவனால் பேசப்படுகிற வார்த்தையைக் குறிப்பதாக யொங்கி சோ விளக்குகிறார். ஆனால், லோகொஸோ பொதுவான வார்த்தையை மட்டுமே குறிக்கிறது என்பது இவரது வாதம். மேலும் விளக்கமாகக் கூறினால், லோகோஸை அனைவரும் பெற்றுக் கொள்ளலாம், ஆனால் ரேமாவை எல்லோரும் அனுபவிப்பதில்லை. லோகொஸை மட்டும் நாடிப்போகிறவர்கள் வாழ்க்கையில் வெற்றி அடைவதில்லை, அவர்கள் கர்த்தரிடமிருந்து ரேமாவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இத்தத்துவத்தை அறிந்து கொள்ளாததால்தான் அநேக கிறிஸ்தவர்கள் கர்த்தரின் ஆசீர்வாதத்தை அடைவதில்லை என்று யொங்கி சோ போதிக்கிறார்.

அதுமட்டுமல்லாமல் ரேமாவைப் பெற்றுக் கொள்வதற்கு ஐந்து வழிமுறைகளையும் யொங்கி சோ காட்டுகிறார். இவ்வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் ரேமாவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது அவரது போதனை. இவற்றைப் பயன்படுத்தியதாலேயே தனது வாழ்க்கை யில் பெரு வெற்றிகள் ஏற்பட்டதாக யொங்கி சோ தெரிவிக்கிறார். யொங்கி சோ காட்டும் ஐந்து வழிமுறைகளும் வேத போதனைகளுக்கு முரண்பாடானவை.

## விசுவாசமும், ஜெபமும்

விசுவாசத்தைப்பற்றியும், ஜெபத்தைப் பற்றியும் யொங்கி சோ போதிக்கும் போதனைகள் மக்களைக் கவரக்கூடியவை. தேவனில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்திற்கும் (Faith in God), தேவனுடைய விசுவாசத்தை நாம் கொண்டிருப்பதற்கும் (Faith of God) பெரும் வித்தியாசம் இருப்பதாக இவர் கூறுகிறார். அதாவது, ஒருவர் தேவனில் விசுவாசம் வைத்திருந்தபோதும் தேவனுடைய விசுவாசத்தைக் கொண்டிராமல் இருக்க முடியும் என்பது இவரது போதனை. தேவனில் இருக்கும் விசுவாசத்தை மட்டும் வைத்துக் கொண்டு ஜெபிப்பதால்தான் அநேகருடைய ஜெபங்கள் ஆசீர்வதிக்கப் படுவதில்லை என்கிறார் இவர். ஆகவே, அவர்கள் தேவனுடைய விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார் யொங்கி சோ. இதற்கு உதாரணமாக மாற்கு 11:22, 23 வசனங்களை எடுத்துக் காட்டுகின்றார். இங்கே இவ்வசனங்கள் தேவனுடைய விசுவாசத்தைக் கொண்ட எவரும் ஒரு மலையைப் பார்த்து, நீ பெயர்ந்து கடலில் போய் விழு என்று கூறினால் அதன்படி நடக்கும் என்று இயேசு கூறுவதாக யொங்கி சோ விளக்கம் தருகிறார். ரேமாவை நாம் தேவனிடம் இருந்து பெற்றுக்கொள்ளும்போதே இத்தேவனுடைய விசுவாசம் நமக்குரியதாகின்றது என்பது இவரது போதனை.

இனி இப்போதனைகள் வேத அடிப்படையில் அமைந்தவையா என்று பார்ப்போம். அதுவே நமது நோக்கம். சிலர், சோம்பேறித்தனத்தின் காரணமாக வேதத்தை ஆராய்ந்து பார்க்க முனைவதில்லை. வேறு சிலர், யொங்கி சோ பிரபலமானவர் என்பதால் அவர் சொல்வதே வேத வாக்கு என்று நம்பத் தயாராக இருக்கின்றனர். கண்ணால் காண்பதெல்லாம் காட்சி என்று அலையும் வேறு சிலர், யொங்கி சோவின் போதனை எப்படி யிருந்தாலும் அவர் வெற்றி அடைந்து வருவதால் அது மட்டுமே முக்கியம் என்று கர்த்தரின் வார்த்தைக்கோ, அவரது வழிகளுக்கோ முக்கியத்துவம் தருவதில்லை. ஆனால் வேதத்தைக் கர்த்தரின் அதிகாரபூர்வமான வார்த்தையாக ஏற்றுக் கொண்டவர்கள் மனித ஞானத்திற்கோ,




பிரபல்யத்திற்கோ முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அவர்களுக்கு வேதம் மட்டுமே முடிவானதும், கர்த்தரின் அதிகாரபூர்வமான கட்டளையாகவும் அமைந்துள்ளது. ஆகவே, அனைத்தையும் கர்த்தரின் முடிவான வார்த்தையான வேதத்தின் அடிப்படையில் ஆராய்ந்தே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர். ஒரு மனிதன் எத்தனை பிரபல்யமானவராக இருந்தபோதும் கர்த்தரின் வேதத்திற்கு மாறாகப் போதிக்கும் அதிகாரம் கொண்டவரல்ல என்பதில் அவர்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை. இதன் அடிப்படையில் யொங்கி சோவின் போதனைகளின் நச்சுத்தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டுமென்பதில் அவர்களுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. ஆகவே, கிறிஸ்தவ உலகம் வீண் போய்விடக்கூடாது என்ற ஒரே நோக்கத்தோடு யொங்கி சோவின் மேலே விபரிக்கப்பட்ட தத்துவம் வேத அடிப்படையில் ஆராயப்பட வேண்டும்.

## யொங்கி சோவின் போதனைகள் ஏன் தவறானவை?

### 1. லோகொஸ், ரேமா பற்றிய விளக்கம் வெறும் கட்டுக்கதை.


வேதத்தைப் படிக்கும்போது நாம் முக்கியமான இரண்டு காரியங்களை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். முதலாவதாக, எப்போதுமே நாம் நமது சிந்தனைகளையும், கொள்கைகளையும் திணிப்பதற்காக வேதத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இரண்டாவதாக, வேதத்தில் காணப்படும் வார்த்தைகளின் அடிப்படையில் மட்டும் போதனைகளை உருவாக்க முனையக்கூடாது. வார்த்தைகளின் அர்த்தத்தை முழு வேதத்தின் அடிப்படையிலேயே புரிந்து கொள்ள வேண்டும். முழு வேதத்தின் அடிப்படையில் புரிந்து கொள்ளப்படாத வார்த்தைகள் அர்த்தமற்றவை.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது யொங்கி சோவின் லோகொஸ், ரேமா ஆகிய வார்த்தைகள் பற்றிய விளக்கம் அர்த்தமற்றதே.

அ. யோங்கி சோவின் விளக்கப்படி, லோகொஸ், ரேமா ஆகிய இவ்விருவார்த்தைகளும் ஒன்றோடொன்று தொடர்பற்ற வித்தியாசமான அர்த்தத்தைக் கொண்டவை. ஆனால், வேதம் இவ்விதமாக இவ்விரு வார்த்தைகளையும் பயன்படுத்தவில்லை. வேதத்தில் இவ்விரு வார்த்தைகளும் ஒரே பொருளைக் குறிக்கும் இரு வார்த்தைகளாகப் பயன்படுத்தப்படுள்ளன. இவை இரண்டிற்குமே வார்த்தை என்பதே பொருள். ஒரே பொருளுள்ள இரு வார்த்தைகள் வேதத்தில் காணப்படுவதில் எந்தப் புதுமையுமில்லை. ஆனால், லோகோஸ், வார்த்தையைக் குறிக்கும் பொதுவான வார்த்தையாகவும், ரேமா தனிப்பட்டவருடைய பேச்சையோ அல்லது குறிப்பிட்ட ஒரு பேச்சின் பகுதியையோ (To indicate a conversation or part of a conversation) பொதுவாகக் குறிப்பிடும் வார்த்தையாகவும் பெரும்பாலும் வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை எந்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பொறுத்து பொருள் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் இவை எச்சந்தர்ப்பத்திலும் யொங்கி சோ கூறுவது போன்ற பொருளில் வேதத்தில் பயன்படுத்தப்படவில்லை. லோகொஸ் விசேடமாக கிறிஸ்துவின் இன்னுமொரு தெய்வீகப் பெயராகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆ. யொங்கி சோவின் கூற்றுப்படி, பொதுவான வார்த்தையான லோகொஸைவிட ரேமாவே சிறப்பானதாகும். ரேமாவே தேவனால் பேசப்படுவதும், நாம் அற்புதங்களைச் செய்ய அவசியமானதுமாகும். ஆகவே, யொங்கி சோவைப் பொறுத்தவரையில் லோகொஸ் மட்டும் பயனற்றது. ஆனால், லோகோஸ் என்ற கிரேக்க வார்த்தை வேதத்தில் இயேசு கிறிஸ்துவையும், வேதத்தையும் குறித்துப் பயன்படுத்தப் பட்டுள்ளது. வேதத்தைக் குறிக்கும் லோகோஸை பயனற்றதாகக் கூறுவது வேதத்திற்குப்

[redacted]





புறம்பான போதனை. சக்தி வாய்ந்த ரேமாவை கர்த்தரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற தனது கோட்பாட்டை விளக்க யொங்கி சோ ரோமர் 10:17 வேதப்பகுதியை உதாரணமாகக் காட்டுகிறார். "கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." இங்கே வசனம் என்பதற்கு ரேமா என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் இவ் வார்த்தை வசனத்தைப் பயன்படுத்திக் கொடுக்கப்படும் பிரசங்கத்தைக் குறிக்கின்றது. அதாவது இங்கே வசனம் என்ற வார்த்தை பொதுவாக முழு வேதத்தையும் குறிக்காமல் அவ் வேதத்தைப் பயன்படுத்திப் பிரசங்கிக்கப்படும் வார்த்தையைக் குறிக்கின்றது. இவ் வேதப்பகுதி முழுவதையும் அது அமைந்திருக்கும் சந்தர்ப்பத்தின் அடிப்படையில் வாசித்துப் பார்த்தால் இவ்வாறு மட்டுமே பொருள் கொள்ள முடியும். அதை மறந்துவிட்டு வெறும் ரேமா என்ற வார்த்தையை மட்டும் வைத்துக் கொண்டு, அது கடவுளிடம் இருந்து பெறப்பட வேண்டிய விசேட வார்த்தை என்று வேதத்திற்குப் புறம்பாகப் பொருள் கூற முற்படுவது மடமை.

அதேபோல், அவர் குறிப்பிடும் இன்னுமொரு வேதப்பகுதியான மத்தெயு 14:29 இல் இயேசு கிறிஸ்து பேதுருவை நோக்கி தண்ணீரில் நடந்து வரும்படியாக வா என்று அழைத்ததாகவும் ரேமா என்ற கிரேக்க வார்த்தையே அங்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவ்வார்த்தையின் வல்லமையால்தான் பேதுருவால் நடக்க முடிந்ததாகவும் யொங்கி சோ கூறியிருப்பது தவறானது. இப்பகுதியை வாசித்துப் பார்த்தால் யொங்கி சோ கூறுவது போல் கிறிஸ்து பேதுருவை நோக்கி "வா" என்று அழைத்த போதும் ரேமா என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. வேறொரு வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இவ்வேதப் பகுதியையும் யொங்கி சோ தவறாகத் தனது சுய நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். ஆகவே, யொங்கி சோ விளக்குவது போல் லோகொஸைவிட ரேமா சிறப்பானதாக வேதத்தில் விளக்கப்படவில்லை.

இ. யொங்கி சோ, ரேமாவை நாம் தேவனிடம் இருந்து காத்திருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்று போதிக்கின்றார். ரேமாவின் மூலமாக நாம் அநேக காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம் என்பதும் அவரது வாதம். ஒருவர் அற்புதங்கள் செய்ய விரும்பினால் அவர் ரேமாவைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார் யொங்கி சோ. இவ்வாறாக பயனற்ற லோகோஸில் நேரம் செலவழிப்பதைவிட சக்தியுள்ள ரேமாவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் அல்லது அதன் மூலம் மட்டுமே அற்புதங்கள் செய்ய முடியும் என்பதும் வெறும் கட்டுக்கதை.

ஆகவே, யொங்கி சோவின் லோகொஸ், ரேமா பற்றிய போதனை வேத அடிப்படையில் அமைந்ததல்ல. இது அவரது சொந்த வார்த்தை அலங்காரம் மட்டுமே. வேத வார்த்தைகளை அறைகுறையான கிரேக்க மொழி ஞானத்துடனும், இறையியல் அறிவுக்குறைபாட்டோடும் பயன்படுத்தியதன் விளைவே இப்போதனை. தனது சுய எண்ணங்களுக்கு வேத வார்த்தைகளைப் பயன்படுத்தி இறையியல் விளக்கம் கொடுக்க முனைகிறார் யொங்கி சோ. கர்த்தர் தனக்கு மட்டுமே வெளிப்படுத்திய சத்தியம் என்ற பெயரில் மக்களை ஏமாற்றும் முயற்சி இது. வேதத்தில் ஏற்கனவே தெளிவாகப் போதிக்கப்படாத எந்தவொரு சத்தியத்தையும் கர்த்தர் இன்று வெளிப்படுத்துவதில்லை.

அத்தோடு, ஏற்கனவே தான் தெளிவாக விளக்கத்துடன் கொடுத்துள்ள வேதத்திற்கு வேறுவிதமான பொருளை புது வெளிப்படுத்துதலின் மூலம் கர்த்தர் எவருக்கும் கொடுப்பதில்லை. அவ்வாறு கர்த்தர் செய்தார் என்று கூறுவது அவர் அடிக்கடி தனது மனதை மாற்றிக் கொள்கிறார் என்று




கூறுவது போலாகும். கர்த்தர் என்றும் மாறாதவர், வாக்குத்தத்தத்தின் தேவன் என்று வேதம் தெரிவிக்கின்றது.

**2. வேதம், தேவனில் நாம் வைத்திருக்கும் விசுவாசம், தேவனுடைய விசுவாசம் என்று யொங்கி சோ கூறுவதுபோல் விசுவாசத்தை இரு பிரிவாகப் பிரித்துக் காட்டுவதில்லை.**


விசுவாசத்தின் மூலம் எவ்வாறு அற்புதங்கள் செய்வது, எவ்வாறு வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவது என்பதற்கு யொங்கி சோ வகுத்துத் தந்துள்ள விசுவாசத்தைப் பற்றிய போதனை வியப்புக்குரியது. விசுவாசத்தை அவர் இரண்டுவிதமாகப் பிரித்துக் காட்டுகிறார். ஆனால் வேதத்தைப் பொறுத்தவரையில் பலவிதமான விசுவாசங்களை அது போதிப்பதில்லை. விசுவாசத்தில் அற்ப விசுவாசம், போலி விசுவாசம் என்பவை பற்றி வேதம் பேசுவதைக் காணலாம். ஆனால், இவர் கூறுவதைப் போல் தேவனில் நாம் வைத்திருக் கும் விசுவாசம், தேவனுடைய விசுவாசம் என்று இருவகை இல்லை. தேவன் நமக்கு ஈவாகத் தந்திருக்கும் விசுவாசம் ஒன்றே. அவ்விசுவாசத்தால் தான் நாம் தேவனில் நம்பிக்கை வைத்திருக்கிறோம். சிலவேளைகளில் கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் ஊக்கம் செலுத்தாதிருந்தால் அவ்விசுவாசம் உறுதி குறைந்து காணப்படலாம். நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் உயர்வடையும் போது அவ்விசுவாசம் உறுதி பெற்றுக் காணப்படும். ஆனால், கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் வளம்பெற இவ்விசுவாசத்தைவிட உயர்வான வேறொரு விசுவாசத்தை, அதாவது தேவனுடைய விசுவாசமென்றதொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று வேதம் எங்கும் போதிக்கவில்லை. ஆனால், யொங்கி சோவைப் போன்றவர்கள் எப்போதும் கர்த்தர் இப்போதனையைத் தங்களுக்கு மட்டும் விசேடமாக வெளிப்படுத்தியதாகக்கூறி கிறிஸ்தவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். வேதத்தில் ஏற்கனவே வெளிப்படுத்தப் படாத ஒரு போதனையைக் கர்த்தர் வேறுவிதத்தில் வெளிப்படுத்துகிறார் என்று கூறுவது வேதத்திற்கு முரணான போதனை. அவ்வாறு கர்த்தர் இதுவரை தனது வார்த்தையை மீறி எதையும் வெளிப்படுத்தியதில்லை. இவ்வாறு போதிப்பவர்களை கிறிஸ்தவர்கள் நம்பக்கூடாது.

**3. வேதத்தைத் தவறாகப்பயன்படுத்துகிறார் யொங்கி சோ.**

வேதத்தைப் படிக்கும்போது கைக்கொள்ள வேண்டிய இரு முக்கிய இலக்கணங்களைப்பற்றி ஆரம்பத்தில் பார்த்தோம். யொங்கி சோவைப் பொறுத்தவரையில் இவற்றிற்கு அவரது ஏட்டில் இடமில்லை. கர்த்தரின் பெயரைச் சொல்லி தேவ பயமே இல்லாது வேதத்தைக் கண்மூடித்தனமான விதத்தில் தவறாக வியாக்கியானம் செய்து இக்கோட்பாடுகளை அவர் உருவாக்கியுள்ளார். கெரிஸ்மெடிக் கூட்டத்தார் மத்தியில் இது சகஜமாக நடக்கும் ஒரு காரியம். பரிசுத்த ஆவியின் பெயரில் அவர்கள் வேதத்தைத் தொடர்ந்து அலட்சியம் செய்து வேதம் அனுமதிக்காத காரியங்களையெல்லாம் கர்த்தரின் பெயரில் செய்து வருகிறார்கள். கர்த்தர் தனது வார்த்தையில் கூறியிராதவற்றை நம்பக்கூடாது, ஆனால் அதற்கு முரணாக நடந்து வழியில் வந்த ஒரு போலிமனிதனின் வார்த்தையைக் கேட்டு அழிந்தான் தேவ மனிதன் என்று 1 இராஜாக்கள் 13 இல் வாசிக்கிறோம். தேவ மனிதன் செய்த தவறு கர்த்தர் தெளிவாகக்கூறியிருந்த சத்தியத்தை விட்டு விலகி, கர்த்தர் வெளிப்படுத்தினார் என்று கூறி ஏமாற்ற முனைந்த மனிதனை நம்பியதே. இதே போல் கர்த்தரின் பெயரில் உலவிவரும் யொங்கி சோவை நம்பி அழியாமல் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டியது கிறிஸ்தவர்களின் கடமை.

**4. யொங்கி சோவின் விசுவாசம் கர்த்தரைவிட மனித சக்தியிலேயே அதிகமாகத் தங்கியுள்ளது.**

கர்த்தரின் திட்டங்களின் இறுதி வெற்றி மனிதனிலையே தங்கியுள்ளது என்று நம்புபவர் யொங்கி சோ. இதையும் வேத அடிப்படையில் அவர் நிரூபிக்க முயன்றாலும் வேதம் அதற்கு எதிரான போதனையையே அளிக்கிறது. மனித சக்தியில் நம்பிக்கை வைக்கும் முதல் மனிதர் யொங்கி சோ அல்ல. இதை




அநேகர் ஏற்கனவே செய்துள்ளனர். நவீன கெரிஸ்மெடிக் இயக்கத்தின் பலவீனமும் இதிலேயே தங்கியுள்ளது. மனித சக்தியில் நம்பிக்கை வைத்து கோட்பாடுகளை உருவாக்கியவர்களில் சார்ள்ஸ் பினி முதலிடம் பெறுகிறார். பெலேஜியனிசக் கோட்பாட்டைப் பின்பற்றிய பினியின் போதனைகளின் பல அடையாளங்களை யொங்கி சோவிலும் காணமுடிகின்றது.

**5. யொங்கி சோவின் போதனைகளில் இரட்சிப்பு பற்றியோ மனந்திரும்புதல் பற்றியோ தீர்க்கமான எந்தவித விளக்கத்தையும் காணமுடியவில்லை.**

அற்புதங்களும், அடையாளங்களும்செய்வதற்காகவே மனிதன் பிறவி எடுத்திருப்பது போலவும், ஒருவருடைய வாழ்க்கையின் இலட்சியமாக இவையே இருக்க வேண்டும் என்பது போலவும் அவரது போதனைகள் காணப்படுகின்றன. அவற்றில் கிறிஸ்துவின் மரணத்தின் மேன்மையைப் பற்றியோ, பாவத்திலிருந்து மனிதனை விடுதலை செய்ய கர்த்தர், கிறிஸ்துவின் மூலம் ஏற்படுத்தித் தந்திருக்கும் பரிகாரப்பலியின் அற்புதத்தைப் பற்றியோ பார்க்க முடிவதில்லை. கிறிஸ்துவின் பெயரை அவர் அடிக்கடி பயன்படுத்தினாலும் தனது போதனைகள் கடவுளுடையவை என்று நிரூபிப்பதற்காகவே அதை அவர் செய்துள்ளார். மனந்திரும்புதலைப் பற்றியோ, அதன் தவிர்க்க முடியாத அவசியத்தைப்பற்றியோ அவரது போதனைகளில் காணமுடிவதில்லை. இரட்சிப்பே வேறு எதைவிடவும் மேலானது, அதற்கே நாமனைவரும் முக்கியத்துவம் கொடுத்து கிறிஸ்துவை நாடிவரவேண்டும் என்றெல்லாம் அவர் போதிப்பதில்லை.

**6. யொங்கி சோவின் கிறிஸ்தவம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல.**

கிறிஸ்தவம் என்ற பெயரில் யொங்கி சோ போதிக்கும் அனைத்தும் வேதத்தோடு பொருந்தி வருவதாயில்லை. வேதத்திற்கு வெளியில் இருந்து கர்த்தரின் வெளிப்படுத்தலை நாடி அலையும் எந்த இயக்கமும், தனி நபர்களும் வேதத்திற்கு கட்டுப்பட்டு நடப்பவர்களல்ல. வேதத்திற்குக் கட்டுப்படாமல், கிறிஸ்துவின் பெயரில் வேதத்திற்கு முரணான போதனைகளை உருவாக்கிப் போதிப்பவர்கள், அவர்கள் எத்தனை பிரபல்யமானவர்களாக இருந்தபோதும் கிறிஸ்துவை உண்மையில் நேசிப்பவர்களல்ல. அவர்களது போதனைகளும் வரலாற்றுரீதியான கிறிஸ்தவத்தைப் பிரதிபலிக்கும் ஒன்றாக இருக்க முடியாது.

இறுதியாக, யொங்கி சோவின் நான்காம் பரிமாணக் கோட்பாடு கர்த்தரின் கோட்பாடல்ல. அது புற மத அடிப்படையில் அமைந்த போலிக்கோட்பாடு. இது போன்ற போதனைகளும், அவற்றை உருவாக்குபவர்களும் தொடர்ந்து இவ்வுலகில் தோன்றிக்கொண்டே இருப்பார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மறு வருகை சமீபிக்கும் இந்நாட்களில் இத்தகைய போலிப் போதனைகள் உலவி வருவது ஒரு விதத்தில் ஆச்சரியத்தை அளிக்கவில்லை. ஏனெனில், கிறிஸ்துவே இவ்வாபத்துக்களைக் குறித்து ஏற்கனவே வேதத்தில் எச்சரிக்கை செய்துள்ளார்.

***வருந்துகிறோம்:***

*திருமறைத்தீபத்தில் தொடராக வெளிவரும் வில்லியம் கேரியின் வாழ்க்கை சரிதம், கிருபையின் கோட்பாடுகள்-ஓர் அறிமுகம் ஆகிய ஆக்கங்களை இவ்விதழில் வெளியிட முடியாமல் போனதற்காக வருந்துகிறோம். ஆசிரியரின் வெளிநாட்டுப் பயணங்களினால் இவ்விதழ் குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்டு வெளிவருகின்றது. வரப்போகும் இதழ்களில் இவை தொடர்ந்து வெளிவரும்.*

# வரலாற்று கிறிஸ்தவத்தின் பாதையில் . . . .

[redacted]

சீர்திருத்தத்திற்காகப் பாடுபட்டு தாம் வாழ்ந்த காலங்களிலே வேத பூர்வமான சபைகளை அமைத்து கிறிஸ்தவத்தைத் தழைக்கச் செய்த சீர்திருத்தவாதிகள், பியூரிட்டன்களைப் போல உழைத்து சபைகள் அமைப்பவர்கள் தமிழர்கள் மத்தியில் ஆயிரக் கணக்கில் இல்லாவிட்டாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிருவர் தோன்றி, தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சீர்திருத்த தீபத்தை ஏற்றி வைத்து அதற்கு எண்ணையிட்டு வருவதைப் பார்க்க முடிகின்றது.

அற்புதங்களையும், அடையாளங்களையும் நாடி ஓடும் கூட்டம் இன்று குறைந்தபாடில்லை. இயேசு கிறிஸ்துவும் கொடுக்கப்பட்டுள்ள அற்புதங்களையும், அடையாளங்களையும் விட வேறு எதையும் எதிர்பார்க்க வேண்டாம் என்று சொல்லியும்கூட அவற்றைத் தொடர்ந்து அடைய வேண்டும், அனுபவிக்க வேண்டும் என்று அவை எங்கு நடக்கின்றன என்று தேடியலையும் மனிதர்கள் கூட்டம் உலகெங்கும் தொடர்ந்து காணப்படுகின்றது. பங்கு பங்காகவும், வகைவகையாகவும் ஆதியில் பேசிய தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலம் இறுதியாகப்பேசித் தனது தெளிவானதும், முடிவானதுமான வார்த்தையை நமக்குத் தந்துள்ள போதும் அது போதாது, அதற்கு மேலும் வேண்டும், அவர் நம்மோடு நேரடியாகப் பேசினால்தான் உண்டு என்று முரட்டுப் பிடிவாதத்துடன் முரண்டு பிடிக்கும் கூட்டத்திற்கும் குறைவில்லை. கிறிஸ்துவுக்குள் நமக்குள்ள விசுவாசம் மட்டும் போதாது, அபிஷேகம் அடைந்தால்தான் உண்டு என்று கிறிஸ்தவத்தைக் குழப்பிக்கொண்டிருக்கும் கூட்டத்தாருக்கும் குறைவில்லை. நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் என்று எப்போதும் மாற்றத்தில் இன்பம் காணும் சில மனிதர்களைப்போல், கிறிஸ்தவத்தின் பெயரில் விதவிதமான அனுபவங்களையும், இன்பங்களையும் நாடி அலைந்து இன்று பலரும் சிரிக்கும் நிலைக்கு கிறிஸ்தவத்தைக் கொண்டு வந்திருப்பவர்களும் ஆல்போல் தழைத்தே வருகிறார்கள். எனது சமீபத்திய மலேசிய விஜயத்தின்போது அங்குள்ள சில நல்ல போதகர்கள் என்னிடம் சில வியப்பான நடவடிக்கைகளைப் பற்றி விபரித்தனர். அதாவது சபையில் வாந்தி எடுக்கும் ஒரு புதிய முறையையும் சில பரவசக்குழுவைச் சார்ந்த சபைகள் கையாளுகின்றன என்று தெரிவித்தனர். இதைச் செய்பவர்கள் இதற்குக் கொடுக்கும் விளக்கம் என்னவென்றால், தமது சரீர அழுக்குகளுடன் ஆராதனைக்கு வருவது சரியல்ல, ஆகவே அவ்வழுக்குகள் அகல வாந்தி எடுப்பதன் மூலம் சரீர, உளசுத்தத்துடன் கர்த்தரை ஆராதிக்கலாம் என்பதாகும். இத்தகைய முட்டாள்தனமான நடவடிக்கைகளால் அந்நியரும் பார்த்துச் சிரிக்கும் நிலைக்கு இவர்கள் கிறிஸ்தவத்தை இழுத்துச் செல்லப் பார்க்கின்றனர்.

இத்தனைக்கும் மத்தியில் வரலாறு கண்டுள்ள, நம்முன்னோர்கள் விசுவாசித்த, வேத அடிப்படையில் அமைந்த மெய்க்கிறிஸ்தவத்தைப் பிரதிபலிக்கும் திருச்சபைகளை அமைக்க வேண்டும், அத்திருச்சபைகளில் அங்கம் வகித்து, கர்த்தரை ஆராதித்து, அவரது ஊழியத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்று வெறும் வீராப்புடன் அல்ல, இருதய சுத்தத்துடனும், தாழ்மையுடனும் பாடுபட்டு வரும் கிறிஸ்துவின் அன்புக்குப் பாத்திரமான நல்மனம் படைத்தவர்களும் பெருகி வருவது நமக்குப் பேரானந்தத்தை அளிக்கிறது. இந்த நூற்றாண்டிலே இவ்வாறு திருச்சபை சீர்திருத்தத்திற்காகப்பாடுபட்டு தாம் வாழ்ந்த காலங்களிலே வேதபூர்வமான சபைகளை அமைத்து கிறிஸ்தவத்தைத் தழைக்கச் செய்த சீர்திருத்தவாதிகள், பியூரிட்டன்களைப் போல உழைத்து சபைகள் அமைப்பவர்கள் தமிழர்கள் மத்தியில் ஆயிரக்கணக்கில் இல்லாவிட்டாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிருவர் தோன்றி, தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சீர்திருத்த தீபத்தை ஏற்றி

[redacted]

வைத்து அதற்கு எண்ணையிட்டு வருவதைப் பார்க்க முடிகின்றது.

இதனை வாசிக்கும் அன்பர்கள், அப்படியானால் மற்ற சமயக்கிளைகளும், சபைகளும் மெய்க்கிறிஸ்தவத்தைப் பிரதிபலிக்கவில்லையா? என்று கேட்கலாம். நாம் இப்படிக்கூறிவிட்டதால் மற்ற சமயக்கிளைகளையும், சபைகளையும் வெறுமனே குறைகூறுவதாக எண்ணிவிடக்கூடாது. ஏனெனில் நமது நோக்கம் குறைகளை எடுத்துக் காட்டுவது மட்டுமல்ல, அத்தோடு வரலாற்று கிறிஸ்தவத்தைப் பின்பற்றி, நமது முன்னோர்கள் அரும்பாடுபட்டு எழுத்தில் வடித்துத்தந்துள்ள விசுவாச அறிக்கையை சபையாக ஏற்று, சமய சமரக் கோட்பாடு, பரவசக்குழுக்களின் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளரும் போதனைகள், உள்ளூர் திருச்சபை அமைப்பை உதாசீனம் செய்து சபைகளென்ற பெயரில் சபை நடத்த முயலும் பிலிமத்திஸம், திருச்சபைகளை கைப்பொம்மையாக தங்கள் ஊழியத்திற்கு பயன்படுத்த முனையும் கிறிஸ்தவ நிறுவனங்கள் ஆகியவற்றினை நிராகரித்து, நற்செய்தியை நாடெங்கும் எடுத்துரைத்து நற்சபைகளை நிறுவ முனையும் திருச்சபைகள் தோன்ற வேண்டும், வளர வேண்டும் என்பதும்தான்.

## வரலாற்று கிறிஸ்தவம்

இத்தகைய சபைகள் எழுவதன் மூலமே தமிழ் மக்கள் மத்தியில் வேதபூர்வமானதும், வரலாற்று அடிப்படையிலும் அமைந்த கிறிஸ்தவத்தைக் காண முடியும் என்பது எனது தாழ்மையான எண்ணம். இங்கே வரலாற்றுக் கிறிஸ்தவம் என்று நான் எதைக்குறிப்பிடுகிறேன் என்று விளக்க வேண்டியது அவசியம். நான் என்ன கூற வருகிறேன் என்பதை அதன் மூலம் வாசகர்களால் புரிந்து கொள்ள முடியும். வரலாற்றிலே, அப்போஸ்தலர்கள் காலத்திற்கு பின் வேதத்தைப் பின்பற்றி வேத அடிப்படையில் சபைகள் அமைத்த இயக்கங்களாக சீர்திருத்தவாத, பியூரிட்டன் இயக்கங்களே காணப்படுகின்றன. பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளிலே எழுந்த இவ்வியக்கங்களின் முக்கிய தலைவர்களாக மார்டின் லூதர், ஜோன் கல்வின், ஜோன் நொக்ஸ் மற்றும் ஜோன் ஓவன், தொமஸ் குட்வின், தொமஸ் புரூக்ஸ், ஜோன் பனியன் ஆகியோர் காணப்படுகின்றனர். மறுபடியும் திருச்சபை ரோமன் கத்தோலிக்க மதத்தின் அடிமைத்தனத்திற்கு உட்பட்டுவிடக்கூடாது என்ற பெரு நோக்குடன் இவர்கள் வரைந்தளித்த விசுவாச அறிக்கைகளே வெஸ்ட்மின்ஸ்டர் மற்றும் 1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கைகள். திருச்சபைகள் போலிப்போதனைகளை நாடி ஓடிவிடாதபடி, தாம் விசுவாசிப்பது என்ன என்பதை தெளிவாக அறிந்து, புரிந்து அதன்படித் தொடர்ந்து நடக்க இவ்விசுவாச அறிக்கைகள் துணைபுரியும் என்று நமது மூதாதையர்கள் நம்பினர். ஏனெனில் சாத்தானும் வேதம் ஓதும் என்ற முதுமொழிக்கிணங்க வேதத்தை விசுவாசிக்கிறோம் என்ற பெயரில் போலிப்போதனைகளும், இயக்கங்களும் எதிர் காலத்தில் எழும் என்பது நம்முன்னோர்கள் அறிந்திருந்த உண்மை. அது மட்டுமல்லாது திருச்சபைகள் தாம் நினைத்தபடி காலத்திற்கு ஏற்றாற்போல் தமது கோட்பாடுகளை மாற்றி அமைத்து கொள்வதையும், சுற்றி உலவும் போதனைகளை இரு கரம் நீட்டி வரவேற்பதையும் இவ்வறிக்கைகளை ஏற்று நடப்பதன் மூலம் சபைகள் தடை செய்ய முடியும் என்றும் விசுவாசித்தனர். இவ்வாறாக இவ்வறிக்கைகளை ஏற்று அதன்படி அமைந்து வளர்ந்த சபைகளையே நாம் வரலாற்றுக் கிறிஸ்தவ சபைகள் என்று அழைக்கிறோம். இதன்படியே ஸ்பர்ஜன் தன் காலத்தில் இவ்வறிக்கையை சபைக்கு அறிமுகப்படுத்தி தன் சபை தவறான போதனைகளால் பாதிப்புறாதிருக்க நடவடிக்கை எடுத்தார். பிலிமத்திஸத்தைப் பின்பற்றுபவர்களோ அல்லது பரவசக்குழுக்களோ இத்தகைய வரலாற்றுப் பின்னணியை ஒரு போதுமே கொண்டிருக்கவில்லை. இவ்வரலாற்றுப் பின்னணியையே அவர்கள் வேம்பாகக் கருதுகிறார்கள்.

அதேவேளை, இவ்வரலாற்று கிறிஸ்தவத்தின் அடிப்படையில் எழுந்த சமயக்கிளைகள் அனைத்தையும் இன்று நாம் வேதபூர்வமான சமயக்கிளைகளாகவும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆரம்பத்தில் விசுவாச அறிக்கைகளைக் கொண்டு எழுந்த ஆங்கிலிக்கன், பிரெஸ்பிடீரியன், பாப்திஸ்து சமயக்கிளைகள் உலகெங்கும் இன்று அவற்றை நிராகரித்துவிட்டு

[redacted]

உலகப்பிரகாரமாக நடப்பது வாசகர்கள் அறிந்த உண்மை. இவைகள் இன்று தொடர்ந்து வரலாற்றுக் கிறிஸ்தவ சபைகளாக நடைமுறையில் வேதத்தைப் பின்பற்றாமல் ரோமன் கத்தோலிக்க மதத்தோடு உறவாடுவதையும், பரவசக்குழுப் போதனைகள் தம் சபைகளில் ஊடுருவத் துணை நிற்பதையும், பெண்களைப் போதகர்களாக ஏற்று பணிபுரிய அனுமதிப்பதையும், வேதம் தவறுகளற்றது என்ற கோட்பாட்டை நிராகரிப்பதையும், இச்சமயக்கிளைகள் அனைத்திலும் பொதுவாகக் காண முடிகின்றது. அத்தோடு இவை இரட்சிப்பு பற்றிய வேத போதனைகளிலும் மனித சக்திக்கு முதன்மை தரும் ஆர்மீயனிஸத்தையே கடைப்பிடிக்கின்றனர். இவைகளில் மோசமானவை வேதத்தின் அடிப்படைப் போதனைகளான கிறிஸ்துவின் பிறப்பு, சிலுவை மரணம், உயிர்த்தெழல் ஆகியவற்றையும் நிராகரிக்கின்றன. இச்சமயக்கிளைகளின் மத்தியில் இன்று ஓரிரு சபைகளும், போதகர்களும் இவற்றை எதிர்த்துப் போராடி வந்தாலும் அவர்களது முயற்சி விழலுக்கிறைத்த நீர் என்பதில் எந்த சந்தேமும் இருக்க முடியாது. இதனாலேயே இன்று இச்சமயக்கிளைகளைத் துறந்து அவற்றிற்கு வெளியே வேதபூர்வமான திருச்சபைகள் அமைப்பதில் உலகெங்கும் பலர் ஈடுபட்டிருப்பதைப் பார்க்க முடிகின்றது. சத்தியத்தை நிராகரித்துவிட்ட சமயக்கிளைகளைத் தொடர்ந்து கிறிஸ்தவ சபைகளாகக் கருதுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது போலாகும். சிலர் கடவுள் இவற்றை மறுபடியும் ஒரு எழுப்புதலின் மூலம் ஆவிக்குரிய சமயக்கிளைகளாக மாற்றுவார் என்ற வீண் நம்பிக்கையில் காலந்தள்ளிக் கொண்டிருக்கின்றனர்.

ஆகவே, வரலாற்று ரீதியிலான கிறிஸ்தவ சபைகள் இன்று எழ வேண்டியது தவிர்க்க முடியாத செயலாக இருக்கின்றது. சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன்களும், அனபாப்திஸ்து என்று அழைக்கப்பட்ட பாப்திஸ்து முன்னோர்களும் எவ்வாறு ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தையும், செத்த சமயக்கிளைகளையும் துறந்து சபைகள் அமைக்க முன்வந்தனரோ அதேபோல் இன்று வேதத்திற்கு மதிப்புக் கொடுக்கும் போதகர்களும், கிறிஸ்தவர்களும் வரலாற்று கிறிஸ்தவத்தின் அடிப்படையில் அமைந்த சபைகள் நிறுவவும், அவ்வாறமைந்த சபைகளோடு ஐக்கியத்தில் வளரவும் முன்வர வேண்டும். சத்தியத்தில் உறுதியும், வைராக்கியமும் கொண்டு இவ்வாறான சபைகள் அமைக்க முற்படும்போது நாம் சில அவசியமான உண்மைகளை மனதில் வைத்திருத்தல் அவசியம்.

**1. திருச்சபை வரலாற்றில் நமக்குத் தெளிவிருப்பதோடு, அதன் வழிவரும் சபைகளை அமைக்கவும் நாம் முன்வர வேண்டும்.**

பரவசக் குழுக்களோ அல்லது காளான்கள் போல் எங்கெங்கும் தோன்றிக் காணப்படும் இன்றைய நவீன சபைகளோ தம்மை வரலாற்றோடு பிணைத்துக் கொள்வதை மூர்க்கமாக எதிர்க்கின்றன. அதற்குக் காரணம், வரலாறு என்பது பழைய பஞ்சாங்கம், ஆகவே அதனுடன் தொடர்பில்லாது இருப்பதே காலத்திற்கேற்ற வேதபூர்வமான சபைகளாக இருக்க வழி என்று இக்கூட்டத்தார் எண்ணுகின்றனர். வேத அடிப்படையில் அமைந்த சபைகள் என்ற பெயரில் இவை வரலாற்றிற்கும் வேதத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்ற முறையில் நடந்து கொள்கின்றன. ஆனால் உண்மையில் வரலாற்றுடன் தொடர்புபடுத்தி வரலாறு கண்டுள்ள வேதபூர்வமான திருச்சபைகளுடன் தம்மை இனங்கான முடியாத சபைகள் வேதபூர்வமான சபைகளாக இருக்க முடியாது. ஏனெனில் நமது தேவன் வரலாற்றின் தேவனாகவும், அவரது சபை வரலாற்றில் எழுந்த சபையாகவுமே காணப்படுகின்றது. ஆகவே, வரலாற்றை நிராகரிப்பது வேதத்தை நிராகரிப்பதற்கு ஒப்பானதாகும்.

சீர்திருத்தவாதத்துடனும், பியூரிட்டனிஸத்துடனும் தொடர்பில்லாது, அவை பற்றிய அறிவற்று, அக்கோட்பாடுகளை நிராகரித்து அமையும் எதுவும் சத்தியத்தில் உறுதியாக தொடர்ந்திருப்பதென்பது மணலில் கயிறு திரிக்கும் காரியத்திற்கு ஒப்பானதாகும். ஆவியானவரின் பெயரில் பரவசக்குழுக்கள் இன்று இவற்றை நிராகரித்து வருவதால் வேதமும் அறியாது, கர்த்தரின் வழிகளையும் அறியாது அழிவை நாடிப் போய்க் கொண்டிருக்கின்றன.

அத்தோடு திருச்சபை வரலாற்றை சரிவர முறையாக அறிந்திருப்பதும் அவசியம். திருச்சபை வரலாற்றையும் வேத சத்தியங்களையும் அதாவது இறையியலையும் தொடர்புபடுத்திப் படித்தல் அவசியம். அப்போதுதான் வரலாற்றில் வேதத்திற்கு எதிராகவிருந்த மனிதர்களையும், இயக்கங்களையும் சரியாக இனங்கண்டு கொள்ள முடியும். இராஸ்மஸ், பெலேஜியன், ஆர்மீனியஸ், சார்ள்ஸ் பினி, எட்வர்ட் இர்வின் போன்ற தவறான வழிகளைப் பின்பற்றிய மனிதர்களையும், அவரது போதனைகளையும், தவறான வழியில் சென்ற இயக்கங்களையும் இம்முறையிலேயே அடையாளங்காண முடியும். அதேவேளை சத்தியத்தில் உறுதியாகவிருந்த சீர்திருத்தவாத சபைகளையும் அதன் தலைவர்களையும் பற்றி அறிந்து கொள்ள முடியும். இங்கேயே வரலாற்று இறையியல் நமக்குக் கைகொடுக்கின்றது. வரலாற்று இறையியல் நமக்கு வரலாற்றில் எழுந்த தவறான போதனைகள் பற்றிய அறிவினைத் தருகின்றது. இவை பற்றிய அறிவு நமக்கு மிகவும் அவசியம். ஏனெனில் இன்று நாம் சந்திக்கும் பெரும்பாலான போலிப்போதனைகள் எல்லாம் வரலாறு சந்தித்துள்ள பழம் கள்ளே தவிர வேறில்லை. இவற்றை அறிந்திருப்பதால் நாம் இன்று எதிர்நோக்கும் ஆபத்துகளிலிருந்து தப்ப முடியும். ஆகவேதான், இறையியல் வல்லுனரான லூயிஸ் பேர்க்கோவ், "வரலாற்றின் அடிப்படையில் படிக்காத எந்த வேத சத்தியமும் அறைகுறை இறையியலுக்கே வழிகோளும்" என்று கூறியுள்ளார். பரிசுத்த ஆவியானவர் வரலாற்றில் தோன்றிய திருச்சபைகள், சான்றோர்கள் மூலம் நமக்கு வழிகாட்டுவதை நாம் மறக்கக்கூடாது என்றும், நமது முன்னோர்களின் எச்சரிக்கைகளையும், அவர்கள் காட்டிய வழிகளையும் நாம் புறக்கணித்தால் பழங்கால போலிப்போதனைகள் அனைத்தும் மருரூபமெடுத்து புதிய பெயர்களில் நம்மை வாட்டிவதைக்கும் என்றும் அவர் போதித்தார்.

**2. ஆரம்பத்திலேயே நம்மை யார் என்று வெளிப்படையாக எடுத்துக் காட்டும் விசுவாச அறிக்கையின் அடிப்படையில் நமது சபைகள் அமைய வேண்டும்.**

இன்று எல்லோருமே வேதத்தை நம்புகிறோம் என்றுதான் கூறுகிறார்கள். திருச்சபை சந்தித்துள்ள போலிப்போதனைகள் அனைத்துமே இவ்வாறு அறிவித்துக் கொண்டே சபைக்குள் நுழைந்துள்ளன. வேதத்தை நம்புகிறோம் என்று கூறும் பரவசக்குழுக்கள், புதிய-சுவிஷேசக் கோட்பாளர், சமய சமரக்கூட்டத்தார் ஆகியோரிலிருந்து நம்மைப் பிரித்துக் காட்டுவது எவை? நம்மை யார் என்று தெளிவாக எடுத்து விளக்கக்கூடியவை விசுவாச அறிக்கைகளே. நம்மைப் பிரித்துக் காட்டக்கூடிய தெளிவான போதனைகள் எதுவுமே இல்லாவிட்டால் சபை மக்கள் குழப்பத்திற் குள்ளாவதையோ அல்லது போலியானவர்கள் நமது சபைகளுக்குள் நுழைந்து விடுவதையோ நம்மால் தடுக்க முடியாது. இவ்வாறான தெளிவான கோட்பாடுகளைப் பின்பற்றத் தவறினதாலேயே இன்று சமயக்குழுக்களில் பல வேதத்தை நிராகரிக்கும் நிலைக்கு வந்துள்ளன.

விசுவாச அறிக்கைகளை எதிர்த்து, தாம் விசுவாசிப்பது என்ன என்று தெளிவாக எடுத்துக்கூறத் தயங்குபவர்கள் நேர்மையானவர்களாக இருக்க முடியாது. இதற்காக விசுவாச அறிக்கைகளைக் கொண்டிராத அனைவருமே நேர்மையற்றவர்கள் என்று நான் கூற வரவில்லை. பலர் அவை இருப்பதையே அறியாதிருப்பதாலும், வரலாற்றுக் கிறிஸ்தவ அறிமுகம் இல்லாததாலும் விசுவாச அறிக்கைகளைக் கொண்டிராதிருக்கின்றனர். ஆனால் இவை பற்றிய அறிவிருந்தும், சுயநலத்தின் காரணமாக சத்தியத்தை வெளிப்படையாக அறிவிக்கத் தயங்குபவர்களை வேதம் நேர்மையுள்ளவர் களாகக் கருதவில்லை. இத்தகையோர் குழம்பிய குட்டையில் மீன் பிடித்து தமது சொந்த நோக்கங்களுக்காக ஊழியத்தைச் செய்பவர்கள்.

ஆகவே, தெளிவாக, வெளிப்படையாக தாம் எதை விசுவாசிக்கிறோம் என்று எடுத்துக்கூறும் சபைகளே இன்று நமக்குத் தேவை. சுவிஷேசக்கோட்பாட்டாளர் என்று கூறிக்கொண்டு சந்தையில் விற்கும் எல்லாச் சரக்கையும் வாங்கிக் கட்டிக் கொள்பவர்கள் சத்தியத்தின் எதிரிகள். மெய்யான, சீர்திருத்த சுவிஷேசக்கோட்பாளன் தான் யார் என்பதை நெஞ்சை நிமிர்த்தி எல்லோருக்கும் தெரிய வைப்பான். இப்படிச் செய்தால் மற்றவர்கள் என்னை ஒதுக்கி வைத்துவிடுவார்கள், சபைக்கு ஆள் வராது என்றெல்லாம்

[redacted]

அவன் கவலைப்படமாட்டான். அவன் சத்தியத்திற்காக உயிரையும் கொடுக்கத் தயாராகி கர்த்தரைப் பின்பற்றுவான்.

இத்தகைய விசுவாச அறிக்கைகள் நாம் விசுவாசிக்கும் அடிப்படைப் போதனைகள் மட்டுமல்லாது, நமது சபை ஆராதனை எவ்வாறமைய வேண்டும், சபை அமைப்பு எவ்வாறிருக்க வேண்டும் என்றெல்லாம் தெளிவாக எடுத்துக்கூறுகின்றன. இதனால் முழுச் சபையும் ஒரே கோட்பாட்டைப்பின்பற்றி நடக்க முடியும். தமது மனம் போனபடி நடந்து எதை எதையோ பின்பற்றுபவர்களுக்கு இத்தகைய சபைகளில் இடமிருக்க முடியாது. இதனால் சபைக்கே நன்மை. ஏனெனில் தெளிவான கோட்பாடுகளைப் பின்பற்றி நடக்க விரும்பாதவர்கள் நிலையான கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது. நிலை தடுமாறுபவர்கள் எப்போதுமே கிறிஸ்துவுக்கு விசுவாசமாக இருந்ததில்லை. இத்தகைய சபைகளுக்கு பரவசக்குழுக்களாலும், தான் தோன்றித்தனமாக இயங்கும் கிறிஸ்தவ நிறுவனங்களாலும் எந்த ஆபத்தும் ஏற்பட முடியாது. நிலை தடுமாறுபவர்கள் இத்தகைய சபைத் தலைவர்களாக என்றுமே வர முடியாது. ஏனெனில், சபை தான் வெளிப்படையாக அறிக்கையிடும் கோட்பாடுகளுக்கிணங்க நடக்கும்போது தவறான மனிதர்கள் அச்சபைத்தலைவர்களாக வருவது கடினம்.

இவை இரண்டுமே ஆரம்பப்படிகள். இப்படிகளில் கால்வைத்து சபை அமைக்க முற்படாதவர்கள் சபை சீர்திருத்தத்தை நினைத்தும் பார்க்க முடியாது. இன்று சீர்திருத்தவாதிகளாக தம்மை அடையாளங்காட்டிக் கொள்ள முனையும் சிலர் சீர்திருத்தப் பாதையில் ஆழமாக இறங்கப் பயப்படுகின்றனர். "இரட்சிப்பு கர்த்தரிடத்தில் இருந்து வருகின்றது; அதை அடைய மனிதன் சுயமாக எதையும் செய்ய முடியாது" என்று நம்புவது மட்டுமே சீர்திருத்தக் கோட்பாடு என்ற தவறான எண்ணத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய சபைகளில் இதைப் போதிப்பதைவிட வேறு எதையும் செய்யத் தயங்குகின்றனர். ஆனால், லூதரோ, கல்வினோ அல்லது ஸ்பர்ஜனோ இதை மட்டுமே செய்ததாக வரலாறு போதிக்கவில்லை. அவர்கள் முழுச்சபை சீர்திருத்தத்தையும் நாடினார்கள். சபை சீர்திருத்தம் அவர்களுடைய மூச்சாக இருந்தது. அன்றாடம் அதை நாடுவதை வாழ்க்கையின் முக்கிய இலட்சியமாகக் கொண்டு உழைத்துள்ளனர். சீர்திருத்தக் கோட்பாட்டில் ஆர்வமுள்ளவர்கள் இன்று அதை எண்ணிப் பார்க்க வேணடும்.

**3. இறுதியாக சீர்திருத்த சபை அமைப்பதில் நாட்டமுள்ளவர்கள் மனம் தளராத வைராக்கியத்தையும், தாழ்மையையும், பொறுமையையும், நேர்மையையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.**

வெறுமனே சாப்பாட்டிற்காகவும், தொழிலுக்காகவும் போதகர்களாகவும், ஊழியக்காரர்களாகவும் இருப்பவர்களுக்கும் சபை சீர்திருத்தத்திற்கும் தொடர்பில்லை. இத்தகைய சபைகளை அமைக்க முற்படுவோர் மக்கள் கூட்டத்தையும், மற்றவர்களின் பாராட்டையும் எதிர்பார்த்து நிற்க முடியாது. பலரின் தூற்றுதலுக்கும், பலவேளைகளில் தனிமையின் கொடுமையையும் சந்திக்க நேரிடும். கர்த்தராகிய கிறிஸ்து அனுபவித்த பல வாதைகளை அனுபவிக்க நேரிடும். சத்தியத்தை வெறுக்கும் இன்றைய சமுதாயத்தில் சத்தியத்தின் அடிப்படையில் சபை அமைப்பதென்பது இனிப்பு முட்டாய் சாப்பிடுவதுபோல் சுவையாக இருக்காது. அதனால்தான் பாதியில் விட்டுவிட்டு ஓடிப்போக முயலாத மன வைராக்கியமும், சொந்தக் காரியங் களுக்காக ஊழியத்தைப் பயன்படுத்த முனையாத நேர்மையும் அவசியம். ஒருவருடத்தில் பத்து சபைகள் எழுப்ப வேண்டும், ஆயிரக்கணக்கானவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய வேண்டும் என்றெல்லாம் கனாக்காணும் அதிகப்பிரசங்கிகளுக்கு, வியர்வை சிந்தி, உழைத்துப் பாடுபடவேண்டிய இவ்வூழியம் சரிப்படாது. அங்கும், இங்குமாக இன்று எங்கும் தோன்றிக் கொண்டிருக்கும், சீர்திருத்த நாட்டமுள்ள நல்ல நண்பர்கள் கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்ற நம்பிக்கையோடு சத்தியத்தின் அடிப்படையில், வரலாறு பூர்வமான சபை அமைப்பதில் ஊக்கமும், உறுதியும் கொண்டுழைப்பதையே இந்தப் பத்திரிகை வரவேற்கிறது.

# கிருபையின் போதனைகள்

அதுவரை கிருபையின் போதனைகளின் முக்கியமான அம்சங்களில் கீழ்வரும் அம்சங்களை விபரமாகப் பார்த்தோம்.

1. கடவுளின் இறைமை அல்லது சர்வ ஏகாதிபத்தியம்,
2. பாவத்தினால் பாதிக்கப்பட்ட மனிதனின் உபயோகமற்ற நிலை,
3. கிறிஸ்துவின் பரிகாரப்பலி.

இவ்விதழில் இவற்றில் இறுதி அம்சமான கடவுளின் முன்னறிவைக் குறித்துப் பார்ப்போம்.

*கடவுளின் முன்னறிவு* (Foreknowledge of God)

கிருபையின் போதனைகளை நிராகரிக்கும் ஆர்மீனியர்களில் சிலர் கடவுளுக்கு முன்னறிவு இருப்பதாகவும், ஆகவே, அவரால் எதிர்காலத்தில் நடக்கவிருப்பவற்றை எடுத்துரைக்க முடிகின்றது என்றும் நம்புகிறார்கள். ஆனால், எதிர்காலத்தில் நிகழவிருக்கும் ஒரு காரியத்தை கடவுள் அறிந்திருப்பாரானால், அக்காரியம் முன்கூட்டியே நியமிக்கப்பட்டதுபோல் உறுதியானதும், நிச்சயமானதுமாகும். ஏனெனில், முன்னறிவு நிச்சயத்துவத்தையும், நிச்சயத்துவம் முன்கூட்டியே நியமிக்கப்படுதலையும் குறிக்கின்றது. ஆர்மீனியர்களில் சிலர் இரட்சிப்பிற்கான தெரிந்தெடுத்தலை நிராகரிப்பதில்லை. ஏனெனில், வேதத்தில் இருபத்தைந்து தடவைகளுக்கு மேலாகக் காணப்படும், தெரிந்தெடுத்தல், தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற வார்த்தைகளை அவர்களால் புறக்கணிக்க முடியாது. ஆனால், தெரிந்தெடுத்தல் கடவுளின் முன்னறிவின் அடிப்படையிலேயே நிகழ்கின்றது என்று கூறுவதன் மூலம் இவ்வார்த்தைகளின் முழு அர்த்தத்தையும் அவர்கள் அழித்துவிடப் பார்க்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரையில், கடவுள் எதிர்காலத்தை முன்னோக்கிப் பார்த்து தன்னை யார் யார் விசுவாசிப்பார்கள் என்று அறிந்து வைத்திருப்பதனால்தான் அவர்களை முன்கூட்டியே அவரால் தெரிவு செய்ய முடிகின்றது என்று கடவுளின் முன்னறிதலைக் குறித்து விளக்கமளிக்கின்றனர்.

ஆனால், கடவுளின் முன்னறிதலை ஏற்றுக் கொள்வதன் மூலம் ஆர்மீனியர்கள் ஒரு பெரும் தவறிழைத்து விடுகின்றனர். அதாவது, அவர்களுடைய போதனைகளுக்கே இது ஆபத்தாக அமைந்து விடுகின்றது. கடவுள் முன்நோக்கிப்பார்த்து தன்னை எவரெவர் விசுவாசிப்பார்கள் என்று அறிந்து அவர்களை மட்டும் தெரிந்து கொண்டிருந்தால், அதேவிதமாக தன்னை விசுவாசிக்க மறுப்பவர்களையும் அவர் முன்னோக்கியே அறிந்து வைத்திருந்திருக்க வேண்டும். அப்படியானால் தன்னை விசுவாசிக்க மாட்டார்கள் என்று தெரிந்தும் கடவுள் ஏன் அவர்களைப் படைத்தார்? உண்மையில் அத்தகையோரைப் படைக்க வேண்டும் என்ற கட்டாயம் அவருக்கில்லை. அவருக்குப் புறத்தே இருந்து எந்தவொரு சக்தியும் அவரை வற்புறுத்தவுமில்லை. ஆகவே, கடவுள் எல்லா மனிதர்களும் இரட்சிப்பை அடைய வேண்டும் என்று தீர்மானித்திருந்தால் தன்னை விசுவாசிக்க மறுப்பவர்களை அவர் படைக்காமலாவது இருந்திருக்கலாம்.

கடவுளின் முன்னறிவை ஏற்றுக் கொண்ட அதே வேளை ஆர்மீனியர்களால், தெரிந்து கொள்ளுதல் என்ற கோட்பாட்டையும், முன்குறித்தலையும் நிராகரிக்க முடியாது. ஆகவே, கடவுளின் முன்னறிவை நிராகரிப்பதைத்தவிர ஆர்மீனியர்களுக்கு வேறு வழியில்லை. ஆனால், கடவுளின் முன்னறிவை ஏற்றுக் கொள்ளாத ஆர்மீனியர்களின் கடவுள் கோட்பாடு வேதபூர்வமான, மெய்யான வல்லமையும், மகா ஞானமும் கொண்ட கடவுளைப் பிரதிபலிப்பதில்லை. கடவுளின் தெரிந்து கொள்ளுதல் அவரது முன்னறிவின் அடிப்படையில் அமைந்திருந்தால் அது முன்னறிவு பற்றிய மெய்யான வேதபோதனையைப் பெரிதும் பாதிக்கும்.

கடவுளின் முன்னறிவை ஆர்மீனியர்கள் வேதபூர்வமாக விளங்கிக் கொள்வதில்லை. வேதம் முன்னறிவைக்குறித்துப் பேசும்போது அது கடவுளின் பெரிதான ஞானத்தை எடுத்துக் காட்டுவதாக விளக்குகிறது. கடவுள் மகா ஞானமுள்ளவர். அவரது ஞானம் பரிசுத்தம் வாய்ந்ததும், பூரணமுமானது ஆகவே, அவரால் எந்தத் தவறையும் செய்ய முடியாது. ஆகவே, அவரது முன்குறித்தலிலும், தெரிந்து கொள்ளலிலும் எந்தவிதக்குறைபாடோ, தவறோ இருக்க முடியாது. அத்தோடு அவரது முன்னறிவை, அவர் முன்கூட்டியே நடக்கப் போவதை பார்த்து அறிந்து அதன் வழிப்படி செயல்படப் பயன்படும் அறிவாக மட்டும் குறுகிய நோக்கத்தோடு புரிந்து கொள்ளக்கூடாது. நிச்சயமாக


கடவுளுக்கு முன்கூட்டியே நடக்கப் போவதனைத் தும் தெரிந்திருந்தாலும் அதன் அடிப்படையில் அவர் தனது மக்களைத் தெரிவு செய்யவில்லை. வேதம் முன்கூட்டியே பார்த்தல் (to foresee) என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. அதற்கு மாறாக, முன்னறிவு (foreknow) என்ற வார்த்தையையே பயன்படுத்துகிறது.

வேதத்தில் முன்னறிவு (to foreknow) என்பதற்கு கடவுள் தனது மக்களோடு முன்னதாகவே ஏற்படுத்திக் கொள்ளும் உறவு (to enter beforehand into a relationship with) என்று பொருள். ஆகவே, கடவுளின் முன்னறிவு, அவர் மிகுந்த அன்போடும், கிருபையோடும், தனக்காக முன்குறித்த மக்களோடு ஏற்படுத்திக் கொண்ட நிச்சயமான, அழிவற்ற உறவினைக் குறிக்கின்றது. ஆகவே, அவர் மனிதர் களின் செயல்களை மட்டுமல்ல, மனுக்குலத்தின் ஒரு பகுதியினரையும் முன்னறிந்துள்ளார் (ரோமர் 8:29). தனது மக்களில் காணப்படும் எந்தத் தகுதியின் அடிப்படையிலும் அமையாத அன்பை அவர்கள்மேல் அவர் செலுத்துவதை இவ்வார்த்தை குறிக்கின்றது.


---

**அடுத்த இதழில்:**

# பழைய ஏற்பாட்டிலிருந்து பிரசங்கிப்பது ஏன் அவசியம்?



*பழைய ஏற்பாட்டிலிருந்து இன்று பலர் பிரசங்கித்தாலும் அது வேதபூர்வமான பிரசங்கமாக அமைவதில்லை. இனி வரப்போகும் இதழ்களில் பழைய ஏற்பாட்டிலிருந்து பிரசங்கிக்க வேண்டிய அவசியத்தை சுட்டிக் காட்டுவதுடன், அதிலிருந்து எவ்வாறு பிரசங்கிப்பது என்று விளக்கும் இரு தொடர் கட்டுரைகளை ஜெப்ரி தோமஸ் திருமறைத்தீபத்திற்காக விஷேடமாக எழுதவிருக்கிறார். வேல்ஸில் (Wales) போதகராக பணிபுரியும் ஜெப்ரி தோமஸ் தெளிவாகவும் அதேவேளை அனைவரும் புரிந்து கொள்ளும்வகையிலும் எழுத வல்லவர்.*



# ஸ்பர்ஜன் சிந்திய சில சிந்தனை முத்துக்கள்!

[redacted]



***பிரசங்கத்தைக் கேட்கிறவர்களின் அழிவே பயங்கரமானால் பிரசங்கிக்கிரவர் களின் அழிவு அதைவிட பயங்கரமான தல்லவா?***
**- ஸ்பர்ஜன் -**

### *போதக ஊழியம்*

மெய்யான தாழ்ச்சி – நிபுணனான இசை அறிஞன் ஒருவன் ஒரு வீணையை எடுத்து வாசிக்கும்போது சில தந்திகளில் இராகம் தவறுகிறதென்று கண்டால் உடனே நிறுத்தி விடுவான். அப்படியே பரிசுத்த ஆவியானவரும் சிலருடைய ஆத்துமாக்கள் வஞ்சகமும், திருக்கும், இரு மனமும் உள்ளவைகளாக இருக்கின்றனவென்று காணும்போது அவைகளில் கிரியை செய்கிறதில்லை. கிறிஸ்துவின் ஆவியானவர் வஞ்சகத்திற்கு துணைநிற்கமாட்டார். சில ஊழியக்காரர் சில உபதேசங்களைத் தாம் விசுவாசியாவிட்டாலும் சபையாரின் நிமித்தம் பிரசங்கிக்கிரதுண்டு. அப்படிச் செய்கிறவர்கள் மகா ஈனமான அடிமைகளைவிட இழிவானவர்கள். நாம் வஞ்சக பிரசங்கிகளாக இராதபடி தேவன் நம்மைக் காப்பாராக.

அகந்தை – தேவ ஆவிக்கு வெறுப்பான இன்னொரு காரியம் அகந்தை. ஒருவன் பெரியவனாகிறதற்கு வழி அவன் தன் சிறுமையை உணருதலே. தன் பார்வைக்குப் பெரியவனாயிருக்கிறவன் தேவனால் மதிக்கப்படமாட்டான். பூமியின் உயர்ந்த ஸ்தலங்களில் வாசம் பண்ண விரும்புகிறவன் மலையின் உச்சி மிகவும் குளிர்ச்சியும், அவாந்தரமுமானதென்று அறிய வேண்டும். கர்த்தர் தாழ்மையுள்ளவர்களிடத்தில் வாசம் பண்ணுகிறார். அகந்தைக்காரரையோ தூரத்தில் இருந்து அறிகிறார்.

### *ஆவியின் அனுக்கிரகம் இல்லாத ஊழியம்*

நாம் தேவனுடைய மெய்யான ஊழியக்காரராயிராமல் பிலேயாமைப்போலும், அவன் ஏறிப்போன கழுதையைப்போலும், தற்காலத்திற்கென்று மாத்திரம் உபயோகிக்கப்படும் எத்தனங்களாயிருப்போம். பிரசங்கவேலையை சிறிது காலம் அமைதியாய் நடத்தினாலும் நம்மில் ஆவியின் அநுக்கிரகம் இல்லையென்பது சபையாருக்கும் நமக்கும் தெரியாமலிருக்கலாம். அப்படியானால் நமது வேலை திடீரென்று முடிவடையக்கூடும் அல்லது நடுவயது கழிந்தபின் சடுதியில் வெட்டப்படுவோம். இடையிலே வெட்டுண்டு போகிற சில வாலிபப்பிரசங்கிகளின் விருத்தாந்தங்களை எழுதினால் அவர்கள் மதுபானத்தினால் உண்டான வைராக்கியமுள்ளவர்களாயும், அந்தரங்கத்தில் மகா அருவருப்பான அசுத்தமும் வெளிக்கு பரிசேய சுத்தமானவர்களாயும் இருந்தார்களென்று எழுதப்படும். வேறு சிலரைப்பற்றி: அவர்கள் வாயில் வேத சாஸ்திரிக்கு ஏற்ற உபதேசமும், உள்ளத்திலோ நாத்திகமுமாயிருந்தார்களென்றும், கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்ததின் நிமித்தம் தேவ கோபம் அந்தச் சடுதியான மரணங்களை நேரிடப்பண்ணிற்று என்றும் வாசிப்போம் என்பதற்கு சந்தேகமில்லை. பயங்கரமான இப்பேர்ப்பட்ட ஆக்கினை நம்மில் யாருக்காவது சம்பவியாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக.

## போதகனது சொந்த பக்தி

போதகனுக்கு மெய்யான பக்தியிருப்பதன்றி அவனுக்குப் பலமான பக்தியும் வேண்டும். தேவ பக்தியாகிய அவன் ஜீவ நாடி பலமாயும் ஒழுங்காயும் அடித்தல் வேண்டும். போதகர்மார் மிகத்திறனுள்ள குணசீலராக இருத்தல் வேண்டும். அவர்களுடைய முழு உள்ளமும் தூய அறிவுடையதாயிருக்க வேண்டும். அநேகர், சாதாரண அங்கத்தினராக இருக்கத்தகுதியுள்ளவர்கள் எனினும் திருச்சபை உத்தியோகத்தை வகிக்கக் கூடியவர்களல்லவே; அவர்கள் ஜீவியம் அதற்கேற்றதல்ல. ஜோன் ஏன்ஜல் ஜேம்ஸ் என்னும் போதகர் சொன்னதாவது: "நீதியின் பிரசங்கி ஒருவன் பாவிகளின் வழியில் நடந்த பிறகு தன் பகிரங்க பாவத்தைப் போலவே தான் பகிரங்கமாய் மனந்திரும்பும் வரைக்கும் ஆலயத்தில் அவன் மறுபடியும் தனது வாயைத் திறக்கலாகாது." என்பதே. அநேகமாய், ஒருவனிடத்தில் துணிகரமான பாவம் காணப்பட்டால், பிற்பாடு அவன் எப்படி மனம் வருந்தினாலும் சரி, போதகனாக இருக்க வேண்டிய குணலட்சனங்கள் அவனிடத்தில் உண்டானதேயில்லை என்பது வெளிப்படை.

போதகனுடைய போதனையும் சாதனையும் ஒன்றுக்கொன்று ஒத்திருக்க வேண்டும். நாம் பலிபீடத்தண்டை தேவனுடைய ஆசாரியராகவும், ஆசாரிப்புக்கூடாரத்து வாசலுக்கு வெளியே பேலியாளின் மக்களாயுமிருக்கக் கூடாது. இருமுகத்தாரை ஒருவரும் நம்புகிறதில்லை. சொல் வேறு செயல் வேறுபட்டாரைப் பின்பற்றுதலாகாது. வார்த்தைகளைவிட கிரியைகளே அதிக ஓசையுடையன என்பது போல், நெறிகெட்ட வாழ்க்கையின் சத்தம் மகா சாதுர்யப்பிரசங்கத்தின் சத்தத்தை மீறிக்கேட்கும். தேவ ஊழியர்களில் சிலர் தங்கள் சம்பளத்திற்குத் தக்கபடி பிரசங்கம் செய்கிறார்கள். ஊழியத்திற்கான முயற்சி சம்பளத்தைவிட அதிகமாகவிருந்தால் அவர்கள் சும்மாவிருக்கிறார்கள். பணமில்லாவிட்டால் அவர்கள் ஜெபிப்பதில்லை; சம்பளமில்லாவிட்டால் அவர்கள் சேவகமுமில்லை.

## பகிரங்க ஜெபம்

ஆலய ஆராதனை ஜெபம் பத்து நிமிசத்திற்கு அதிகப்படலாகாது என்று அனுபவமுள்ள பிரசங்கி ஒருவர் சொல்லியிருக்கிறார். சுருக்கமான ஜெபம் என்று குறை சொல்லுவோர் ஆயிரம் பேரில் ஒருவர்தான்; போதகர் நீண்ட ஜெபம் செய்கிறார் என்று குறைகூறுகிறவர்களோ ஏராளமாயிருப்பார்கள். ஜார்ஜ் விட்பீல்ட் என்பவர் ஒரு பிரசங்கியைப்பற்றி, "அவர் தமது ஜெபத்தினால் என்னை அதிகமாய் எழுப்பிவிட்டு ஜெபசிந்தனையுள்ளவனாக்கினார்; அத்தோடு முடித்திருப்பாரானால் நன்றாயிருந்திருக்கும். ஆனால் அப்படிச் செய்யாமல் பின்னும் அதிக நேரம் ஜெபம்பண்ணி என் உற்சாகத்தைத் தணித்துவிட்டார்" என்றுசொன்னாராம். ஆராதனையில் இருபத்தி ஐந்து நிமிடம் ஜெபித்துவிட்டு, கர்த்தரிடம் தங்கள் ஜெபத்தின் குறைவுகளை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு ஜெபத்தை முடிக்கின்ற போதகர்மார் இருக்கின்றார்களே, இப்போதகர்களின் தவறுகளினால் வருந்துகிற சபையாருக்கு ஐயோ! பரிதாபம்!

## தேவாராதனை வேதவாசிப்பு

ஆராதனையில் வேத வாசிப்பு அனாவசியமானதென்றும், பிரசங்கத்தை சரியானபடி ஆயத்தம் செய்யாமல் நேரத்தைப் போக்குவதற்கு பிரசங்கியார் செய்கிற தந்திரமென்றும் சிலர் நினைக்கலாம். ஸ்கொட்லாந்தில் பிரபலமான ஒரு போதகர் ஆராதனையில் வேதாகமம் வாசிப்பதை முக்கியமானதாக நடத்தி வந்தார். சபையாரில் சிலர் அதை விரும்பாமல் ஆட்சேபித்தார்கள். அப்பொழுது போதகர் வேதபுத்தகத்தின் முதல் பக்கத்தில் "இராஜாவின் விஷேசித்த

கட்டளையினால் சபைகளில் வாசிக்கும்படி நியமிக்கப்பட்டது" என்று அச்சிடப்பட்டிருப்பதை அவர்களுக்குக் காண்பித்து அவர்கள் வாயை அடைத்தார். நமக்கோ இயேசு இராஜாவே முன்மாதிரி. "அவர் ஓய்வு நாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து வாசிக்க எழுந்து நின்றார்" என்று சுவிஷேசத்தில் நாம் வாசிக்கிறபடியால் ஜீவனுள்ள தேவனுடைய வசனங்களை ஆராதனையில் ஒரு பாகமாக பகிரங்கமாய் வாசிப்பது முக்கியமானது.

வேத வாசிப்பைப்பற்றி அறிய வேண்டிய சில முக்கிய குறிப்புகளுண்டு. அவை என்னவெனில் ஆராதனையில் வாசிக்க வேண்டிய பாகம் பகிரங்க வாசிப்புக்கு ஏற்றதா என்று பார்க்க வேண்டும். வாசிக்க வேண்டிய வேதபாகம் ஜனங்களின் நிலைமைக்கும் பிரசங்கிக்கப்படப்போகிற விஷயத்திற்கும் ஏற்றதாயிருக்க வேண்டும். எந்தப் பாகத்தையும் கைக்கெட்டினபடி வாசிக்காமல் உபதேசம், கடிந்து கொள்ளுதல், சீர்திருத்தல், படிப்பித்தல் ஆகிய பல நோக்கங்களும் நிறைவேற்றத்தக்கதாக வேதாகமத்தின் பல பகுதிகளிலுமிருந்து தெரிந்தெடுத்து வாசிக்க வேண்டும். அப்படிச் செய்யும்பொழுது கிறிஸ்து மார்க்க சத்தியம் பூரண வடிவாய் சபையாருக்கு முன் வைக்கப்படுகிறது.

ஆராதனையில் வாசிக்கப்படும் பகுதிகள் எவ்வளவு நீளமாய் இருக்க வேண்டும் என்பதை சமயத்திற்கேற்றவாறு தீர்மானித்துக் கொள்ளலாம். தற்காலத்திலுள்ள வேதாகமத்தின் அதிகாரப்பிரிவுகள் மிகவும் உபயோகமாயிருந்தாலும், அவைகள் சில இடங்களில் அதிகமாய் பிரிக்கப்பட்டிருக்கிறபடியால், அப்பிரிவுகளை நாம் கைக்கொள்ளாமல் வாசிப்பு அதிகமாய் சுருங்கிப்போகாதபடி ஓர் அதிகாரத்தின் பாகத்தை விட்டும், வேறோர் அதிகாரத்தின் பாகத்தைக் கூட்டியும் வாசிக்கலாம்.

வேதத்தை வாசிக்கும்போது வாசிக்கிறதன் பொருள் கேட்போர் மனதில் படத்தக்கதாக அதை முதலில் தனியே வாசித்து அதன் கருத்தை உணர்ந்தறிய வேண்டும். அதிக முயற்சி எடுத்தாலொழிய இவ்வாறு வாசிக்க முடியாது. ஆகையால் பொருளபட வாசிப்பது இலேசானதென்றோ, வேதத்தின் எந்தப் பாகத்தையும் திறந்தவுடனே சரியானபடி வாசித்துவிடலாம் என்றோ நினைக்கக்கூடாது. ஆயத்தமில்லாமல் சிலர் பிரசங்கிக்கக்கூடும். என்றாலும் வாசிக்க ஒருவராலும் முடியாது; ஏனெனில் புத்தகத்தைப் பார்த்து வார்த்தைகளைத் திருத்தமாய் சொல்வது எழுத்துக் கூட்டலேயல்லாமல் வாசிப்பதல்ல. தகுதியான ஆயத்தத்துடன் நமது சத்தத்தின் மூலமாய் தேவன் தமது வார்த்தைகளினால் காண்பிக்கக் கருதிய பொருளை வெளிப்படுத்துவதே சரியான வாசிப்பு.

## *பிரசங்கியின் நடத்தை*

போதகன் தன் சம்பள விஷயத்தைப் பற்றி குருடனைப் போலவும், செவிடனைப் போலவும் இருக்க வேண்டும். பொறுப்புள்ள உதவிக்காரர்கள் இல்லாத வேளையிலும், வேறு தருணங்களிலும் போதகன் முன்னின்று பொருள் சேகரிப்பதில் அக்கறைப்பட வேண்டிவரும். ஆனால், பொருள் சேகரிப்பில் போதகன் தலையிடுதல் திவ்வியப்பணிவிடைக்குத் தடைதான். வேறு வழியில்லாவிட்டால் இதனை சகிக்க வேண்டியதுதான். உதவிக்காரர்கள் உண்மையின்மையானால் அல்லது நிர்விசாரத்தினால் குழப்பமேற்படுமானால் நடப்பது நடக்கட்டும் என்று போதகன் அசட்டையாய் இருக்கக்கூடாது. ஆனால், அவர்கள் காரியங்களை சரிவர நடத்திக் கொண்டு போகும்போது அவர்களது கடமைக்குள் தலையிட்டுக் கொள்வது நல்லதல்ல.

*[சார்ள்ஸ் ஸ்பர்ஜன் எழுதி தமிழில் வெளிவந்துள்ள ஸ்பர்ஜன் அறிவுரைகள் நூலில் இருந்து எடுக்கப்பட்ட சிந்தனைத்துளிகள்.]*

# வியாக்கியானப் பிரசங்கம்

## Expository Preaching

[redacted]

**பிரசங்கத்திற்கான செய்தி எப்பொழுதும் நேரடியாக வேதத்திலிருந்தே தோன்ற வேண்டும். நாம் ஒரு செய்தியை மனதில் வைத்துக் கொண்டு அதை நிரூபிப்பதற்கான வசனங்களை வேதத்தில் தேடிப்பார்க்கக் கூடாது.**

***-மார்டின் லொயிட் ஜோன்ஸ்-***

போதகர்கள் எவ்வாறு பிரசங்கம் செய்ய வேண்டுமென்று போதிக்கும் அநேக நூல்கள் ஒரு சிறு நூலகத்தை நிரப்புமளவுக்கு ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் வேதபூர்வமான வியாக்கியானப் பிரசங்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவை ஏராளம்.

எல்லா கிறிஸ்தவ அனுபவங்களுக்கும் கோட்பாடுகளே அடிப்படையாக உள்ளது. கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்டு அமையாத கிறிஸ்தவ அனுபவம் நிலத்தில் புதைக்கப்படும் வெட்டப்பட்ட ஒரு மலரைப் போன்ற தாகும். அது வெகு சீக்கிரத்தில் அழிந்து விடும். கோட்பாடுபூர்வமான வியாக்கியானப் பிரசங்கம் வேதபூர்வமான அனைத்து பிரசங்கங்களுக்கும் அடித்தளமாக இருப்பது மட்டுன்றி, அவற்றின் சரீரமாகவும் உள்ளது. கிறிஸ்தவ கோட்பாடுகள் கிறிஸ்தவத்தைப் பற்றிய சத்தியத்தைத் தவிர வேறில்லை. வேதம், எல்லா வேதவாக்கியங்களும் போதிப்பதற்கு நன்மை யாயுள்ளன என்று கூறுகின்றது.

நமது கிறிஸ்தவ அனுபவங்கள், நோக்கங்கள் அனைத்துமே கிறிஸ்தவ கோட்பாடுகளாளேயே ஊக்குவிக்கப்படுகின்றன. மற்றப் பகுதிகளோடு ஒப்பிட்டுப் முறையாகப் போதிக்கப்படும் வேதத்தின் எந்தவொரு பகுதியும் நமக்கு கிறிஸ்தவ அனுபவத்தில் ஊக்கமளிக்காமலிருக்க முடியாது. ஆகவேதான், கிறிஸ்தவ கோட்பாடு எந்தவித சந்தேகமுமில்லாமல் வேதபூர்வமான வியாக்கியானப் பிரசங்கத்தின் அடிப்படை அம்சமாக உள்ளது என்று கூறமுடியும். எனவே, கிறிஸ்தவ கோட்பாடுகளே விசுவாசத்திற்கும், பரிசுத்த வாழ்க்கைக்கும், எல்லாவித முறையான நடவடிக்கைகளுக்கும் காரணமாக இருப்பதால் அவற்றை எல்லோரும் தெள்ளத்தெளிவாகப் புரிந்து கொள்ளும்படிச் செய்யவேண்டியது பிரசங்கிகளின் பெருங்கடமையாக இருக்கின்றது.

கோட்பாடுகள் அடங்கிய பிரசங்கங்களை நமக்கு எவ்வித பயனுமளிக்க முடியாத செத்த பிரசங்கங்களாக சிலர் கருதுகிறார்கள். இவ்வாறு செய்வது, பாலையும், மாம்ச உணவையும் நாடி நிற்கும் உள்ளங்களுக்கு வெறும் எலும்பைக் கொடுப்பது போன்றதாகும் என்று இவர்கள் கருதுகிறார்கள். போதனைகளின் அடிப்படையில் அமைந்த சில பிரசங்களைப் கேட்கும்போது இவ்வாறு கூறத்தோன்றும். இதற்குக் காரணம் கிறிஸ்தவப் போதனைகள் அல்ல; அப்போதனைகளை சரியான முறையில் விளக்கிப் போதிக்கத் தெரியாத பிரசங்கிகளே ஆகும். கோட்பாடுபூர்வமான பிரசங்கங்கள் உயிரற்ற இறையியல் விரிவுரைகளாகவும், விவாத அடிப்படையில் அமைந்த ஆராய்ச்சிக்கட்டுரையாகவும் இருக்க வேண்டிய அவசியமில்லை. கோட்பாடுகள் அனைத்தும் எப்போதுமே அனுபவபூர்வமாகவும், நடைமுறையில் கடைப்பிடிக்கக்கூடியதாகவும் விளக்கப்பட வேண்டும். ஆகவே, நடைமுறை கிறிஸ்தவ வாழ்க்கை, கிறிஸ்தவ போதனைகள், கிறிஸ்தவ கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிபடையில் அமைந்தாக இருக்க வேண்டும். சத்துள்ள போதனைகளின் அடிப்படையில் சபையை வளர்க்க முற்படாத ஒரு போதகன் நல்ல அடித்தளமிடாமல் வீடு கட்ட முயலும் கொத்தனுக்கு ஒப்பானவன்.

நல்ல போதனைகள் எப்போதுமே நடைமுறைக்கேற்றதாகவும், அனுபவபூர்வமானதாகவும், கேட்பவர்களுடைய நிலமைகேற்றவிதத்தில் அவர்களுடைய தேவைகளை சந்திப்பதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு வேதபோதனைகள் நடைமுறையில் அனுபவபூர்வமாகவும், கேட்பவர்

**22 - ஆம் பக்கம் பார்க்க**

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

[redacted]

***கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே திருமறைக்கல்வி என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவ கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்டின் லூதர், ஜோன் கல்வின் போன்றோர் இதன் அவசியத்தைப் பெரிதும் உணர்ந்திருந்தனர். சார்ள்ஸ் ஸ்பர்ஜன் 1889 இல் தன் சபை மக்களின் நன்மை கருதி இத்தகைய திருமறைக் கல்வி நூலை வெளியிட்டார். இதனையே இங்கு விளக்கக் குறிப்புகளுடன் வழங்குகிறோம்.***

*கேள்வி 32: நீதிமானாக்குதல் என்றால் என்ன?*

*பதில்: நீதிமானாக்குதல் என்பது கடவுளின் இலவசமான கிருபையின் செயலாகும். இதன் மூலம் அவர் நமது பாவங்களை மன்னித்து, கிறிஸ்துவின் நீதியை நமது கணக்கில் வைத்து, விசுவாசத்தின்மூலமாக நம்மைத் தனது சமுகத்தில் நீதிமான்களாக ஏற்றுக் கொள்கிறார்.*

*(ரோமர் 3:24-25; 8:30; 4:6-8; 2 கொரி.5:19,21; ரோமர் 5:17-19; கலா. 2:16; பிலி.3:9)*

*கேள்வி 33: திட்ப உறுதியாக அழைக்கப்பட்டவர்கள் இவ்வுலகில் எத்தகைய சலுகைகளை அனுபவிக்கிறார்கள்?*

*பதில்: திட்ப உறுதியாக அழைக்கப்பட்டவர்கள் இவ்வுலகில், நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல் ஆகியவற்றையும், அவற்றிலிருந்து பெறப்படும் பல சலுகைகளையும் அனுபவிக்கின்றனர்.*

*ரோமர் 8:30; எபேசி. 1:5; 1 கொரி. 6:11; 1:26,30)*

**விளக்கக்குறிப்பு:** இதுவரை திட்ப உறுதியான அழைப்பு, மனம் திரும்புதல் ஆகியவற்றைக் குறித்துப் பார்த்தோம். இப்பாடத்தில் நீதிமானாக்குதலைக் குறித்துப் படிப்போம்.

மேல்வரும் போதனை, ஒரு பாவி கடவுளுக்குமுன் எவ்வாறு நீதிமானாக முடியும் என்ற கேள்விக்கான பதிலைத் தருகிறது. கடவுளுடைய பூரணமான நீதிக்கட்டளைகளுக்கு எதிராக நடந்து பாவியாகி, கடவுளின் முன் குற்றவாளியாக தண்டனைக்கைதிபோல் இருக்கும் மனிதன் அவற்றில் இருந்து எவ்வாறு விடுபட முடியும்? இதை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் ஒரு நீதிபதிக்கு முன்னால் நிற்கும் கைதியை நினைத்துப் பாருங்கள். உபாகமம் 25:1 இல், "மனிதருக்குள்ளே வழக்குண்டாய், அவர்கள் நியாயம் விசாரிக்கப்பட நியாயஸ்தலத்திலே வந்தால் நியாயாதிபதிகள் நீதிமானை நீதிமான் என்றும் குற்றவாளியைக் குற்றவாளி என்றும் தீர்க்கக்கடவர்கள்" என்று மோசே கூறுவதைப்பார்கிறோம். இவ்வசனத்தின் மூலம், ஒரு நீதிபதி குற்றவாளியொருவனுக்கு சாதகமாக தீர்ப்பளிக்கும்போது அவன் நீதிமான் என்று அறிக்கையிடுவதாக விளக்குவதைப் பார்க்கிறோம். அதேபோல் ஒரு நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட மனிதனொருவனை குற்றவாளியாகக்காணும்போது அவன் குற்றவாளி என்று அறிக்கையிடுவதைப் பார்க்கிறோம். இதைப்புரிந்து கொள்வது அவசியம். ஏனெனில், நீதிமானாக்குதல் என்பது ஒரு அறிக்கையிடும் நடவடிக்கையாகும். கடவுள் தனது தீர்ப்பை இவ்வாறு அறிக்கையிடுகிறார். அதாவது, அவர் ஒரு குறிப்பிட்ட நபரைப்பார்த்து, அவன் குற்றவாளியல்ல, ஆகவே, அவன் தண்டனைக்கைதியல்ல என்று தீர்ப்பளிப்பதாகும். ஆனால், ரோமர் 3:23 கூறுவதுபோல், எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாக இருப்பதால், கடவுள் எவ்வாறு ஒரு பாவியைப் பார்த்து அவன் நீதிமான் என்று தீர்ப்பளிக்க முடியும்?

இதற்கு பதில் கூற வேண்டுமானால், கடவுளே பாவிகளை நீதிமான்களாக்குகிறார் என்றுதான் கூறவேண்டும். ஆனால், கடவுள் பாவிகளை நீதிமான்களாக்குவதற்கும், அவர்களைப் பரிசுத்தவான்களாக்குவதற்கும் வித்தியாசமிருப்பதை நாம் புரிந்து

கொள்ள வேண்டும். உண்மையில் கடவுள் பாவிகளை நீதிமானாக்குதல் மூலம் நீதிமான்களாகவும், பரிசுத்தமாக்குதலின் மூலம் பரிசுத்தவான்களாகவும் மாற்றுவது உண்மைதான். ஆனால், கிறிஸ்தவத்தின் மகிமை என்னவெனில், கடவுள் பாவிகள் பரிசுத்தவான்களாக இல்லாத நிலையில் அவர்களுக்கு பூரணமான நீதியை இலவசமாக வழங்குவதே.

இது எவ்வாறு நடைமுறையில் நிகழ்ந்தது என்பதை இப்போது விளக்கமாகப் பார்ப்போம். இதை விளக்குவதற்காக ஒரு முக்கியமான பதத்தை நாம் பயன்படுத்தல் அவசியமாகிறது. இதனை ஆங்கிலத்தில் "இம்பியுடேசன்" (Imputation) என்பார்கள். இதற்கு ஒருவருடைய பங்கை இன்னொருவருடைய கணக்கில் வைத்தல் என்று பொருள். உதாரணமாக ஆதாமுடைய பாவத்தைப் பார்ப்போம். ஆதாமுடைய பாவம்; அதாவது அவனது குற்றவுணர்வும், குற்றத் தண்டனையும் அவன் வழிவந்த எல்லா மனிதர்களினதும் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் கிறிஸ்து இயேசுவையும், அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் பொறுத்தவரையில் இரண்டுவகையான "இம்பியுடேசனை" நம்மால் பார்க்க முடிகின்றது. முதலாவதாக, எமது பாவம் கிறிஸ்துவின் கணக்கில் வைக்கப்படுகிறது (2 கொரி.5:21). அதாவது நமது பாவம் அவர்மேல் சுமத்தப்பட்டு, நமது பாவத்தை அவர் செய்ததாகக் கருதப்படுகிறார். இரண்டாவதாக, அவரது நீதி நமது கணக்கில் வைக்கப்படுகிறது (2 கொரி. 5:21). அதாவது கிறிஸ்துவின் பூரணமான நீதி நமது கணக்கில் வைக்கப்படுவதுடன், கடவுள், நாம் எந்தப்பாவத்தையுமே செய்யவில்லை என்பதுபோல் எம்மைக் கருதுகிறார்; அவரது நீதிச்சட்டங்களை நாம் பூரணமாகக் கடைப்பிடித்துள்ளதுபோல் கருதுகிறார்.

மேலே கூறப்பட்ட விளக்கங்களை நாம் புரிந்து கொண்டால் கடவுளே நம்மை நீதிமான்களாக்குகிறவராயிருக்கிறார் என்று அறிந்து கொள்ளலாம் (ரோமர் 8:33). கடவுளே நாம் நீதிமான்களென்று அறிக்கையிடுகிறார். "விசுவாசத்தின் மூலம் நீதிமான்களாகுதல்" என்ற வேத சத்தியத்தைப் பலர் தவறாகப்புரிந்து கொண்டிருப்ப தால் இவ்வுண்மையை நாம் வலியுறுத்த வேண்டியது அவசியமாகின்றது. இச்சத்தியத்தின்படி நம்மை நீதிமான்களாக்குவது விசுவாசமல்ல. விசுவாசம் நமது நற்கிரியை அல்ல. நாம் நீதிமான்களாவதற்கு விசுவாசம் எப்போதுமே அடிப்படையாக இருப்பதில்லை. கிறிஸ்துவின் பரிகாரப்பலியே நமக்கு அவரது நீதியைப் பெற்றுத்தருகிறது. அதனால்தான் இரட்சிக்கும் விசுவாசம் வேறெதிலும் இல்லாமல் கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசமாக இருக்க வேண்டும் என்று வேதம் போதிக்கின்றது. கிறிஸ்துவைப்போல், அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பாவத்தைத் தாங்கியவர் வேறெவருமில்லை. ஆகவே, விசுவாசமானது ஒரு கருவி மட்டுமே. விசுவாசமாகிய கருவியின் மூலமே நாம் கடவுளின் நீதியைப் பெற்றுக் கொள்கிறோம். ஆனால், அந்நீதிக்கு மூலகாரணமாக விசுவாசம் இருப்பதில்லை.

சமீப காலத்தில் சில சுவிஷேசக் கோட்பாட்டு இறையியலாளர் இப்போதனைக்குத் தவறான விளக்கம் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். இவர்கள், வேதம் விசுவாசிகளை நீதிமான்களாக கடவுள் அறிக்கையிடுகிறார் (Imputed Righteousness) என்பதை மாற்றி, அவர்களுக்குள் கடவுள் நீதியைச் செலுத்துகிறார் (Infused Righteousness) என்று போதிக்கின்றனர். இவர்கள், கிறிஸ்து தன்னால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பாவ நிவாரணத்திற்காக அவர்களுடைய பாவத்தைத் தன் மேல் ஏற்று, கடவுளின் கோபத்தைச் சந்தித்து, தனது மரணத்தின் மூலம் கடவுளைச் சமாதானப்படுத்தி தனது மக்களுக்காக நீதியைப் பெற்றுத் தந்ததைப் போதிக்காமல், கடவுளுக்கும், அவரது மக்களுக்கும் இடையில் உள்ள குடும்ப உறவையே விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்குதல் என்ற போதனை விளக்குவதாகத் தெரிவிக்கின்றனர். இது வேதத்திற்கும், வரலாறுபூர்வமாக சீர்திருத்தவாதிகளால் போதிக்கப்பட்டு வந்த போதனைக்கும் முரணானதாகும்.

அத்தோடு ஒரு மனிதன் பல தடவைகள் நீதிமானாக்கப்பட முடியாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு தடவை மட்டுமே ஒரு மனிதன் நீதிமானாக்கப்படுகிறான். மேலும், ஒரு மனிதன் மனந்திரும்பி விசுவாசிக்காதவரை அவன் நீதிமானாக்கப்படுவதில்லை. நீதிமானாக்குதலாகிய இவ்வேத போதனையை போதிக்கும் முறையிலேயே ஒரு சபையின் எழுச்சியும் வீழ்ச்சியும் தங்கியுள்ளது. இப்போதனையை நிராகரிக்கும் சபைகளும், சரிவர நியாயமாகப் போதிக்காத சபைகளும் கிறிஸ்துவின் சபைகளாக இருக்க முடியாது.

**வேதத்தின் ஒரு நூலையோ அல்லது அதன் குறிப்பிட்ட ஒரு பகுதியையோ முழு வேதத்தின் அடிப்படையில் தெளிவாக விளக்கித் தொடர்ச்சியாகப் பிரசங்கிப்பதே வியாக்கியானப் பிரசங்கமாகும்.**

களுடைய தேவைகளை சந்திக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டுமானால், அப்போதனைகளை எடுத்து விளக்கப் பயன்படுத்தப்படும் கருவியாகிய பிரசங்கம் அதைச் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

பிரசங்கங்களில் பல வகையுண்டு. ஒரு வசனத்தை மட்டும் பயன்படுத்தி வேத பூர்வமாகப் பிரசங்கிப்பதில் ஸ்பர்ஜன் வல்லவராக இருந்தார். இம்முறையை ஆங்கிலத்தில் Texual Preaching என்று அழைப்பார்கள். ஸ்பர்ஜன் அதிக வேத ஞானமுள்ளவராக இருந்ததால் ஒரு வசனத்தை முறையாக அது அமைந்துள்ள பகுதிக்கேற்ப விளக்கிப் போதிப்பதில் வல்லவராக இருந்தார். ஆனால் இம்முறை அத்தகைய ஞானமில்லாதவர்களுக்குப் பயன்படாது. பரிசுத்தவான்களும் இம்முறையைப் பயன்படுத்திப் பிரசங்கித்துள்ளனர். ஒரு தலைப்பை அடிப்படையாக வைத்து செய்யும் பிரசங்கத்தை Topical Preaching என்று அழைப்பார்கள். இதன் மூலம் வேதத்தின் ஒரு குறிப்பிட்ட போதனையை முழு வேதத்தையும் பயன்படுத்திப் போதிக்கலாம். ஆனால் மேற்கூறப்பட்ட இருமுறைகளும் நல்ல பிரசங்க முறைகளாக இருந்தபோதும், இன்று நமது சூழ்நிலைக்கு உதவக்கூடியதும், அவசியமானதுமானது வியாக்கியானப் பிரசங்கமே (Expository Preaching). இப்பகுதியில் நாம் வியாக்கியானப் பிரசங்கத்தின் அவசியத்தையே விளக்க முனைகிறோம்.

வேதத்தின் ஒரு நூலையோ அல்லது அதன் குறிப்பிட்ட ஒரு பகுதியையோ முழு வேதத்தின் அடிப்படையில் தெளிவாக விளக்கித் தொடர்ச்சியாகப் பிரசங்கிப்பதே வியாக்கியானப் பிரசங்கமாகும். இது ஒரு சுருக்கமான விளக்கமாகும். இத்தகைய பிரசங்கத்தினால் பல பயன்களுண்டு.

1. ஒரு பிரசங்கி வேதத்தின் ஒரு நூலையோ, அல்லது ஒரு நூலின் ஒரு குறிப்பிட்ட பகுதியையோ பல வாரங்களுக்குப் பிரசங்கிப்பது என்று தீர்மானித்தால் வரப்போகும் வாரங்களில் தாம் பிரசங்கிக்கவிருப்பது என்ன என்று அவருக்குத் தெரிந்திருக்கும். இதனால் அடுத்த வாரம் எதைப் பிரசங்கிக்கப்போகிறோம் என்று அவர் அலைய வேண்டிய அவசியமில்லை. பலர் ஒவ்வொரு வாரமும் பிரசங்கப்பொருளுக்காக அலைவது மட்டுமன்றி கேட்பவர்களையும் கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல் எங்கெங்கோ அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

2. வேதத்தில் ஒரு நூலையோ அல்லது குறிப்பிட்ட ஒரு பகுதியையோ பல வாரங்களுக்குப் பிரசங்கிக்கும்போது சபையாருக்கு வேதத்தை முறையாகப் போதிக்க முடிகின்றது. கேட்கும் மக்களும் இதன்மூலம் தாம் எதைப் படிக்கிறோம், எங்கு போகிறோம் என்று தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது. அத்தோடு அவர்கள் வேத அறிவில் வளர முடிகின்றது.


3. பிரசங்கி வியாக்கியானப் பிரசங்க முறையைப் பயன்படுத்தும்போது அவர் தேவையற்றதைச் சொல்லாமல் வேதப்பகுதியில் இருப்பதை மட்டும் விளக்கிப் போதிக்க முடியும். பலர் ஒரு வசனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு வேதத்திற்குப் புறம்பாக எதையெதையோ சொல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். வியாக்கியானப் பிரசங்க முறையைப் பயன்படுத்தும் பிரசங்கி அவ்வேதப்பகுதியைத் தெளிவாகப் படிக்க வேண்டியது அவசியம். அப்பகுதியை தொடர்ச்சியாகப் பிரசங்கிக்கப் போவதால் பிரசங்கிப்பவருக்கு அப்பகுதி என்ன கூறுகின்றது என்பதில் நல்ல விளக்கம் இருக்க வேண்டும். இதனால் பிரசங்கியும் சோம்பேரியாக இல்லாமல் வேதத்தைப் படிக்க வேண்டிய அவசிய மேற்படுகின்றது. இன்று வாராவாரம் பிரசங்கமென்ற பெயரில் எதையெதையோ உளரிக் கொட்டிக் கொண்டிருப்பவர்களையே பிரசங்க மேடைகளில் பார்க்கிறோம்.

4. வியாக்கியானப் பிரசங்கத்தைப் பயன்படுத்துவதால் போதகர்கள் சபையாருக்கு வேதத்தை அனுபவபூர்வமாகப் போதிக்க முடியும். ஒரு வேதப்பகுதியை தாம் நினைத்தவாறு பயன்படுத்தாமல் தகுந்த விளக்கமளித்துப் போதிப்பதால் சபையாரால் எவ்வித வற்புறுத்தலும் இல்லாமல் வேதத்திற்கு கட்டுப்பட முடிகின்றது. அவர்களால் கர்த்தரின் சத்தத்தைக் கேட்க முடிகின்றது.

(வளரும்)

# புதிய வெளியீடுகள்

## திருச்சபை சீர்திருத்தம்




இதுவரை திருமறைத்தீபத்தில் "கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை" என்ற தலைப்பில் தொடராக வெளிவந்த கட்டுரைகளை விரிவாக்கித் தொகுத்து திருச்சபை சீர்திருத்தம் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளோம். வாசகர்களில் பலரும் இவை நூலாக வெளிவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க இதனை நல்ல முறையில் வெளியிட்டுள்ளோம். 72 பக்கங்கள் கொண்ட இந்நூல் திருச்சபை போதகர்கள், சபை மக்கள், ஊழியக்காரர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதனை எங்கு எவ்வாறு பெற்றுக்கொள்வது என்று கூடிய விரைவில் அறியத்தருவோம்.

## சுவிஷேசக் கோட்பாடும் புதிய சுவிஷேசக் கோட்பாடும்

இதுவும் திருமறைத்தீபத்தில் ஏற்கனவே கட்டுரையாக வெளிவந்தது. இபோது நூலுருவில் வெளிவந்துள்ளது. இன்றைய கிறிஸ்தவ உலகில் சுவிஷேசக்கோட்பாட்டாளர் போல் தோற்றமளித்து வரும் போலிகளை இனங்காட்டி, மெய்யான சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தின் அடிப்படை அம்சங்களை தெளிவாக எடுத்துரைக்கும் நூல்.

## தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு

கடந்த இதழில் வெளிவந்த ஜேம்ஸ் அடம்ஸின் கட்டுரை இப்போது நூல் வடிவம் எடுத்துள்ளது. கிறிஸ்து இலவசமாக வழங்கும் இரட்சிப்பை மனித முயற்சிகளின் மூலம் அடைய முயல்வோரின் செயல்களின் பின்னணியில் உள்ள தவறான இறையியல் போதனைகளையும், நடைமுறைகளையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் அடம்ஸ். ஒவ்வொரு கிறிஸ்தவரும் இன்று அவசியம் வாசித்துப் பயனடைய வேண்டிய நூல்.

**இந்நூல்களை எவ்வாறு எங்கு பெற்றுக் கொள்வது போன்ற விபரங்களைக் கூடிவிரைவில் அறியத்தருவோம்.**

**சவரின் கிறேஸ் வெளியீடுகள்**
**த. பெ. எண் 62 159**
**சில்வியா பார்க்**
**நியூசிலாந்து (email: bala@ihug.co.nz)**

# எண்ணங்கள் !

திருமறைத்தீபம் ஒக்டோபர்–டிசம்பர், இதழ் 4 எனது மனதைவிட்டு என்றும் அகன்றுவிட முடியாத இனிமையான தெளிவான, தெளிதேன் போன்று சகல ஊழியர்களுக்கும் மிகவும் பிரயோஜனமாயிருக்கின்றது. திருமறைத்தீபம் தொடர்ந்து எமது சபைகள், இல்லங்களில் பிரகாசிக்க எல்லாம் வல்ல கிருபையுள்ள தேவன் அருள்புருவாராக.

*பாஸ்டர் எஸ். ஜே. பத்திநாதன், வட்டுக் கோட்டை, ஸ்ரீலங்கா*

திருமறைத்தீபம் வாசித்தேன். மிகவும் அறபுதமானதாகவும், வித்தியாசமானதாகவும் இருந்தது. வேத சத்தியங்கள் சரியான விதத்தில் வெளியிடுவதும், சீர்திருத்த தந்தையரின் அன்றைய கருத்துக்களை (இன்று நாம் அறியாதவை) வெளியிடுவதும் சிறப்பானது. கிறிஸ்தவ ஆன்மீக நூல் என்ற பெயரில் வெளிவரும் ஏராளமான உப்புச் சப்பற்ற வெளியீடுகளின் மத்தியில் தீபம் தனித்துவமானது. இது தொடர்ந்து வெளிவர வேண்டும். இவ்வரிய வெளியீட்டை தொடர்ந்து அனுப்பி வையுங்கள்.

*எம். ஜூட் சுதர்சன், மானிப்பாய், ஸ்ரீலங்கா*

திருமறைத்தீபம் சகோதரன் ஒருவர் மூலம் கிடைத்தது. இதுவரை நான் வாசித்தவற்றில் வில்லியம் கேரி, கிருபையின் போதனைகள், கிறிஸ்தவக் கோட்பாடுகள் மிகவும் பிரயோஜனமான முறையில் இருந்தன. தொடர்ந்து பத்திரிகையை அனுப்பி வையுங்கள்.


*ஜெ. ஜெனிதா, மட்டக்களப்பு, ஸ்ரீலங்கா*

கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பத்திரிகைக்கு நன்றி. தவறாது தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். அனுப்பி வையுங்கள். வேத சத்தியங்களை மனித பயமற்று, எவ்விதத்திலும் மாற்ற முற்படாமல் அப்படியே எழுதும் உங்களைப் போன்றவர்களுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். தேவன் எம்மோடிருந்து சத்தியத்திற்காகப் போரிடும்போது நாமேன் பயப்பட வேண்டும்?

*சாரா பாலச்சந்திரன், கனடா*

எனது நண்பரொருவர் மூலம் பத்திரிகை கிடைத்தது. வரலாறு பூர்வமாக வேத சத்தியங்களை எடுத்து விளக்கும் பத்திரிகையை வாசித்துப் பயனடைந்தேன். கூடுதலாக இதழ்களை அனுப்பினீர்களானால் சபை மக்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும். முன்னைய இதழ்களையும் அனுப்பத் தவறாதீர்கள்.

*Rev. தேவருட்செல்வம், சாவகச்சேரி, ஸ்ரீலங்கா*



## உள்ளே . !


1. போல் யொங்கி சோ
2. வரலாற்று கிறிஸ்தவத்தின் பாதையில்
3. கிருபையின் போதனைகள்
4. ஸ்பர்ஜன் சிந்திய சில சிந்தனை . .
5. வியாக்கியானப் பிரசங்கம்
6. கிறிஸ்தவக் கோட்பாடுகள்
7. எண்ணங்கள் !